இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - FEBRUARY 2026
VOL. 23 ISSUE 11 - 28 PAGES - Rs. 21/-

பிப்ரவரி 2026

2026 ஜனவரி 4ம் தேதி, சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடத்தப்பட்ட புதுவருட பேரின்ப பெருவிழா, கிறிஸ்தவர்களின் ஐக்கியத்திற்கு மாதிரியாக அமைந்ததோடு, ஆவி நிறைந்த செய்தியினாலும் ஆராதனையினாலும் மறக்கமுடியாத மாலைவேளையாகவும் அமைந்தது. பல்வேறு திருச்சபைகளை சேர்ந்த, பாரம்பரியங்களைக் கொண்ட ஏறக்குறைய 12,000 பேர், 2026 புத்தாண்டில் தேவனுடைய வழிகாட்டுதலையும் பரிபூரண ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளும் ஒரே இருதயமும் நோக்கமும் கொண்டவர்களாக கூடி வந்தனர். ஏறக்குறைய 7 லட்சம்பேர் பல்வேறு சமூக ஊடக தளங்கள் வாயிலாக இணையம் மூலம் இணைந்திருந்தனர்.

போதகர் ஆபிரகாம் தாமஸ், நிகழ்ச்சியின் அனைத்துப் பகுதிகளையும் ஆண்டவருக்கு அர்ப்பணித்து ஏறெடுத்த ஆரம்ப ஜெபத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. Rev. D. மோகன், ஐக்கிய கிறிஸ்தவ அருட்பணியையும், தேசத்தையும் தேவனுக்கு முன்பாக உயர்த்தி, வரும் ஆண்டில் நீதி வழிநடத்தவேண்டுமென்று பிரார்த்தித்தார். 2026ம் ஆண்டில் ஒவ்வொரு விசுவாசியும் தேவ ராஜ்யத்திற்காக பாடுபடுவதால், எல்லா திருச்சபைகளும் ஊழியங்களும் கனத்தினால் முடிசூட்டப்படவேண்டுமென்றும், தேசம் எழுப்புதலையும் சுகத்தையும் தெய்வீக பாதுகாப்பையும் அனுபவிக்கவேண்டும் என்றும் பேராயர் கதிரொளி மாணிக்கம் வேண்டுதல் செய்தார். தேசமெங்குமுள்ள நிறுவனங்களுக்காகவும், சமூக நல ஸ்தாபனங்களுக்காகவும் Rev. ஜாண் F. காலேப் ஊக்கமாக ஜெபித்தார். தேசத்தின்மேல் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக ஊற்றப்படவேண்டுமென்று போதகர் ஜோஸ்வா ஸ்டீபன் ஜெபித்தார். மாமறைதிரு A. பால் ஃப்ரான்சிஸ் ரவிச்சந்திரன், வல்லமையான ஊக்குவிக்கும் வார்த்தைகளை பகிர்ந்துகொண்டு, மக்கள் விசுவாசத்தோடு முன்னேறிச் செல்லும்போது கர்த்தர்தாமே அவர்களுக்காக யுத்தம் செய்வார் என்று கூடி வந்திருந்தோருக்கு நினைவுப்படுத்தினார். 2026ம் புத்தாண்டை ஒருமித்து கொண்டாடும்விதமாக கேக் வெட்டப்பட்டபோது சந்தோஷம் மைதானம் முழுவதையும் நிறைத்தது.

கத்தோலிக்க திருச்சபையின் Episcopal Vicar Rev. Fr. பீட்டர் துமா, சகோதரர் மோகன் சி. லாசரஸ் ஆகியோர் மக்களிடம் எழுப்புதலை குறித்து பேசியதோடு, தேவ சமாதானத்திற்காகவும், செழிப்புக்காகவும் மாநிலத்திலும் தேசத்திலும் தேவ ராஜ்யம் அமையவும் ஜெபித்தனர். முழு நிகழ்ச்சியையும் போதகர் ஆல்வின் தாமஸ் தொகுத்து வழங்கினார்.

ஸ்டெல்லா ரமோலாவும், டேனியல் டேவிட்சனும் நடத்திய துதி ஆராதனை வேளை, கிறிஸ்துவின் இணையற்ற அன்பை அனைவருக்கும் நினைவுப்படுத்தியது. திருமதி ஸ்டெல்லா தினகரன், 2026 புத்தாண்டில்

தேவ ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக அமையவேண்டும் என்று ஜெபித்தார். ஷேரன் தினகரன், 2026ம் ஆண்டு எல்லா ஜனங்களுக்கும் அற்புதங்களின் ஆண்டாக அமையும் என்று தீர்க்கதரிசனமாக கூறி, சக்கர நாற்காலிகளில் இருப்போரும், மன நல பாதிப்புள்ளோரும் நிச்சயமாகவே சுகத்தையும் விடுதலையையும் பெற்றுக்கொள்வார்கள் என்றும் தெரிவித்தார்.

Dr. பால் தினகரன், தேவ வாக்குத்தத்தங்களை அறிவித்தார். தேவ ராஜ்யமும் நோக்கமும் ஒவ்வொரு வீட்டிலும், திருச்சபை ஊழியத்திலும் தேவ ஜனங்களின் வாழ்வின் ஒவ்வோர் அங்கத்திலும் கட்டப்படும் என்று நிச்சயமாய் அறிவித்தார். ஊழியத்தின் வெவ்வேறு தளங்களில் பணியாற்ற அழைக்கப்பட்டுள்ள மக்களுக்கான தீர்க்கதரிசனங்களையும் அவர் அறிவித்தார். கூடியிருந்த மக்களின் வாழ்வில் தேவ வல்லமை கிரியை செய்ததை அவர்கள் பெற்ற விடுதலையும் அற்புதங்களும் உறுதி செய்தன. ஒவ்வொருவருடைய இருதயமும் தேவ அன்பின் ஆவியினால் நிரப்பப்படவும், ஒவ்வொரு வாழ்க்கையும் தேவனுடைய ஜீவ ஆலயமாக கட்டப்படவும்படியான அபிஷேகத்திற்காகவும் சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன் மனதுருக்கத்துடன் ஜெபித்தார்.

எல்லா கட்டுகளும் உடைக்கப்பட்டு, நிறைந்து வழிந்து, மேற்கொள்ளும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் வாழ்க்கை ஸ்திரப்படும்படியும் சாமுவேல் தினகரன் ஜெபித்தார்.

போதகர் சாம் P. செல்லத்துரை ஸ்தோத்திர ஜெபம் செய்தார். மாமறைதிரு Dr. லாரன்ஸ் பயஸ் துரைராஜ் ஆசீர்வாத ஜெபம் செய்தார். Rev. S. ஆனந்த், ஆசீர்வாதத்தை உரைத்தார். புத்தாண்டு 2026 ஜெபத்தோடு ஒருமனதின் அஸ்திபாரத்தில் அமையும்படி இந்நிகழ்ச்சி நம்பிக்கை, ஒற்றுமை, தெய்வீக தயவின் எதிர்பார்ப்பு நிறைந்ததாக நடந்தது.

எழும்பி கெர்ச்சித்திடுங்கள்

தேர்வுக்கு ஆயத்தமாகும் மாணவருக்கான சிறப்பு ஜெபம்

அன்புள்ள பரம தகப்பனே, நீர் என்மேல் அன்பாயிருப்பதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எதிர்காலத்தில் எனக்கென்று பெரிய காரியங்களைத் திட்டம்பண்ணியிருக்கிறீர் என்று விசுவாசிக்கிறேன். தேர்வுகளை எழுதுவதற்கு நான் ஆயத்தமாகிக்கொண்டிருக்கிற இந்த வேளையில், நீர்தாமே என் உள்ளத்தினுள் வந்து அதை உம் வீடாக்கிக்கொள்ளவேண்டுமென்று ஜெபிக்கிறேன். என்மேல் இரக்கம் கொண்டு, நான் செய்த தவறுகளையெல்லாம் மன்னித்தருளும். என் மனதை, என் ஆவியை, என் சரீரத்தை சுத்திகரித்தருளும்; என்னை உம் பிள்ளையாக மறுரூபமாக்கியருளும்.

தயவு செய்து எப்போதும் என்னோடு தங்கியிருந்து பெரிய காரியங்களை செய்து முடிக்கும்படி என்னை வழிநடத்தியருளும். ஞானமுள்ள இருதயத்தை எனக்குத் தந்து, உம் ஞானத்தாலும், அறிவாலும், புத்தியாலும், கவனத்தாலும், ஞாபக சக்தியாலும் என்னை நிறைத்தருளும் (கொலோசெயர் 2:3; யாக்கோபு 1:17; லூக்கா 2:52). நான் படிப்பிலும் தேர்வுகளுக்கு ஆயத்தம் செய்வதிலும் சிறந்திருக்க உதவும். எனக்கு நல்ல சுகத்தையும், தெய்வீக பெலனையும், எல்லாவற்றிலும் மன சமாதானத்தையும் தந்தருளும். தேர்வுகளை எழுதும்போது உம் கரம் என் கரத்தின்மேல் அமரவேண்டும் என்று ஜெபிக்கிறேன். எல்லா தேர்வுகளிலும் எனக்கு சிறந்த வெற்றியை தந்தருளும்.

நீர் என்மேல் அன்பாயிருப்பதை தேசத்தில் மிக உயர்ந்த ஸ்தானத்திற்கு என்னை கொண்டுசென்று சாட்சியாக விளங்கப்பண்ணுவீராக (யோசுவா 1:9; ஏசாயா 58:14; எபிரெயர் 3:4). உம் அன்பை அனைவரிடமும் பகிர்ந்துகொள்வேன் என்று வாக்குப்பண்ணுகிறேன். இயேசுவே நான் உம்மை நேசிக்கிறேன். உமக்கே எல்லா மகிமையையும் செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.



2026ம் ஆண்டுக்கான தேவ வாக்குத்தத்தங்கள்

பரலோகம் உங்களோடு கிரியை செய்யும்
2026ம் ஆண்டுக்கான தேவனுடைய ஆசீர்வாதங்கள்

அ) கர்த்தரே எல்லாவற்றையும் கட்டுவார்

"எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன்" (எபிரெயர் 3:4)

ஆ) இந்தவற்றை நீங்கள் மறுபடியும் கட்டும்படி தேவன் கூறுவார்

"உன்னிடத்திலிருந்து தோன்றினவர்கள் பூர்வமுதல் பாழாய்க் கிடந்த ஸ்தலங்களைக் கட்டுவார்கள்; தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்களின்மேல் நீ கட்டுவாய்; திறப்பானதை அடைக்கிறவன் என்றும், குடியிருக்கும்படி பாதைகளைத் திருத்துகிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய்" (ஏசாயா 58:12)

இந்த ஆசீர்வாதங்களின் அடிப்படையில் 2026ம் ஆண்டுக்கான தேவனுடைய திட்டத்தை Dr. பால் தினகரன் பகிர்ந்துகொண்டுள்ளார்.

1. ஆண்டவர் தாம் வாசம்பண்ணும் தேவ ஆலயமாக உங்களை மறுபடியும் கட்டுவார். தேவனுக்குப் பிரியமான பரிசுத்தமான, ஜீவபலியாக உங்களை மாற்றுவார் (1 கொரிந்தியர் 3:16; 6:19; ரோமர் 12:1)

2. தேவன், உங்கள் வீட்டார் அனைவருக்கும் பெரிதான இரட்சிப்பை அருளிச்செய்வார். முறிந்த உறவுகளைச் சீர்ப்படுத்தி, உங்கள் வீட்டில் சமாதானத்தை திரும்ப தருவார். உங்கள் வீட்டார் அனைவர்மேலும் தம் ஆவியை ஊற்றுவார் (அப்போஸ்தலர் 16:31; 1 கொரிந்தியர் 7:14; அப்போஸ்தலர் 2:17).

3. கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிறவர்கள் மத்தியில் ஒரு மனதை தேவன் உண்டாக்குவதோடு, ஒரே நோக்கத்தையும் உருவாக்குவார். தம் ஊழியர்கள் அனைவர் மத்தியிலும் நன்மையான தும், தமக்குப் பிரியமுமான உறவை ஏற்படுத்துவார். திருச்சபையின்மேல் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப் படுவார் (சங்கீதம் 133:1,2)

4. தேவன், பரிசுத்த ஆவியின் வரங்களைப் பயன்படுத்தி அவருக்கு நீங்கள் ஊழியம் செய்யும்படியும், உங்கள் மூலமாக அற்புதங்கள் நடக்கும்படியும் செய்து, கிறிஸ்துவின் சாயலை வெளிப்படுத்துவார் (அப்போஸ்தலர் 10:38; 1 கொரிந்தியர் 12:8-10; 2 கொரிந்தியர் 3:18)

5. தேவன் தம் தீர்க்கதரிசன கிருபையை போதகர்கள், ஊடகங்கள் வாயிலாக செய்தியளிப்போர், பாடகர்கள், எளியவர்களுக்கும் தேவையிலுள்ளவர்களுக்கும் பணி செய்கிறவர்கள், வர்த்தகர்கள், தொழில் செய்வோர், மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், மக்களின் உரிமையை காக்கும் செயற்பாட்டாளர்கள், சட்டங்களையும் விதிமுறை களையும் நடைமுறைப்படுத்துகிறவர்கள் மேல் வைப்பார். (வெளிப்படுத்தல் 10:11: நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரை யும், ராஜாக்களையுங்குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொல்லவேண்டும்).

6. தேவன் உங்கள் பெயரை, பொறுப்பை, அந்தஸ்தை, உடைமைகளை மறுபடியும் உருவாக்குவார். அவர் உங்கள் வீட்டை கட்டுவார்; உங்கள் ஊழியத்தின், வர்த்தகத்தின், நிறுவனங்களின் அமைப்பை ஸ்திரப்படுத்துவார் (எரேமியா 31:4; 2 சாமுவேல் 7:11)

7. தேவன் தம் ஊழியர்களுக்கு தெய்வீக பாதுகாப்பை அருளிச்செய்வார் (சகரியா 2:5).

8. தேவன், தேசமெங்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக் கும்படியான வாசல்களை இன்னொரு முறை திறப்பார்; சீஷர்களை உருவாக்கும்படி உங்களை அமர்த்துவார் (மத்தேயு 28:19,20).

தேவ நாமம் மகிமைக்காக இந்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்படி விசுவாசியுங்கள்; ஜெபியுங்கள்.

2026 ஜனவரி 3ம் தேதி, சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்ற சென்னை வாலிபர் திருவிழா, பட்டணத்திலுள்ள இளம் பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய புதுப்பித்தலின் அனுபவத்தை அளித்தது. படைப்பூக்கத்தை ஊக்குவித்தல், ஐக்கியம் கொள்ளுதல், முழு மனதோடு தேவனுக்கு அர்ப்பணித்தல் போன்றவற்றில் ஆயிரக்கணக்கானோர் நேரடியாகவும், YouTube வழியாக இணையத்தின் வாயிலாகவும் பங்கேற்றனர். மாலை 3 மணியிலிருந்து 6 மணி வரை வேத வினா, குழு மற்றும் தனி பங்களிப்பு, கயிறு இழுத்தல், Kahoot, Stand-up மற்றும் குலுக்கல் போன்ற விளையாட்டுகளும் தாலந்து போட்டிகளும் நடைபெற்றன. அவை, சந்தோஷமாகவும் நகைச்சுவையாகவும் இருந்தன.

மாலை நிகழ்ச்சி, போதகர் ஜஸ்டின் சாமுவேலின் ஆரம்ப ஜெபத்துடன் தொடங்கியது. போதகர் பென்னி ஜோஸ்வா உற்சாகமான ஆராதனையை நடத்தினார். பரிசுத்தமாக வாழ்வது, பக்திக்குரிய குணங்களுடன் வாழ்க்கையை மறுபடியும் கட்டுவது குறித்த நாடகத்தை காருண்யா தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் கல்வி நிறுவனத்தின் மாணவ மாணவியர் நடத்தினர்.

ஸ்டெல்லா ரமோலாவும் டேனியல் டேவிட்சனும், கூடி வந்திருந்தவர்களை துதி அபிஷேக வேளையில் நடத்தினர். சகோ. சாமுவேல் தினகரன், ஏசாயா 60:22 என்ற வேத வசனத்தின் அடிப்படையில் வாலிபர்கள் குறுக்கு வழிகளை தேடாமல் சத்தியத்தின் ஆவியோடு, உண்மையாகவும் நேர்மையாகவும் நடக்கவேண்டும் என்று உற்சாகப்படுத்தினார் (யோவான் 16:13). தேவன் தாம் அழைத்தவர்களை தகுதிப்படுத்துகிறார் என்றும் நினைவுப்படுத்தினார் (மத்தேயு 25:21; 1 பேதுரு 4:10).

இந்தக் கூட்டத்தில் எழும்பிய வல்லமையான சாட்சிகள்:

சென்னை தண்டையார்பேட்டையைச் சேர்ந்த ஆண்டிரியா என்ற சகோதரி, சகோ. சாமுவேல் தினகரன் அப்போஸ்தலர் 2:17 என்ற வசனத்தை தீர்க்கதரிசனமாகக் குறிப்பிட்டபோது, முதல் முறையாக அடக்க இயலாத அபிஷேகத்தை பெற்றதாகவும், அந்நிய பாஷைகளில் பேசியதாகவும் சாட்சி கூறினார்.

இன்னொரு சகோதரி, கடந்த ஆண்டு காலில் நடந்த அறுவைசிகிச்சை மற்றும் அவர் செய்த தற்கொலை முயற்சிக்குப் பின்பு வேகமாக நடக்க முடியாமல் நம்பிக்கை இழந்திருந்ததாகவும், ஆனால், ஆராதிக்க ஆரம்பித்ததும் நடக்க முடிந்ததாகவும் கூறி, ஆண்டவருக்கு ஊழியம் செய்ய தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

வர்ஷா என்ற சகோதரி, தேவன் சகோ. சாமுவேல் தினகரன் மூலமாக தன்னோடு பேசியதாகவும், மார்ச் மாத தேர்வுகளுக்காக ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும் அவருக்கு எல்லாம் தலைகீழாக மாறும் என்றும், மாநில அளவிலான மதிப்பெண்கள் கிடைக்கும்; குடும்பம் சீர்ப்படும் என்ற நிச்சயத்தைக் கொடுத்ததாகவும் சாட்சி கூறினார்.

பரிசு குலுக்கல் மற்றும் ஜெபத்துடன் இந்நிகழ்ச்சி நிறைவுற்றது. அநேக இளம் பிள்ளைகள் இந்த ஆண்டில் எழுந்து கெர்ச்சிக்கவும், தங்கள் வாழ்க்கையில் எல்லாவிதங்களிலும் இயேசுவை காட்டவும் மறுஅர்ப்பணிப்பு செய்தார்கள்.

ஜெபத்திற்கு பதில்களைப்பெறுவது எப்படி?

அன்பானவர்களே,

உங்கள் உள்ளத்தின் வேண்டுதல்களை தாம் அருளிச்செய்வதாக இந்த மாதத்தில் தேவன் வாக்குப் பண்ணுகிறார். ஜெபம் என்பது பரலோகத்திலிருக்கும் அன்பான தகப்பனுக்கும், அவரை சார்ந்திருக்கும் பிள்ளைகளுக்கும் நடுவில் நடக்கும் உரையாடலாகும். அது வெறுமனே சமயரீதியான நடைமுறை அல்ல.

தேவன் செவிகொடுக்கிறார் என்ற நம்பிக்கையோடு தலைமுறை தலைமுறையாக விசுவாசிகள் முழங்காற் படியிட்டு கண்ணீருடன் மனதுக்குள் பரிதவித்து கூப்பிட்டு ஜெபிக்கிறார்கள். ஜெபத்திற்கு பதில் கிடைத்த சாட்சிகள் இருக்கின்றன. தேவன் ஏன் சில ஜெபங்களுக்கு பதில் அளிக்கிறார்; சில ஜெபங்களுக்கு பதில் அளிப்பதில்லை? போன்ற கேள்விகளும் மனதுக்குள் உள்ளன. வேதம், நம்மை குழம்பி தவிக்கவிடவில்லை. மாறாக, அது விசுவாசியின் உள்ளம், விசுவாசம், வார்த்தை, சித்தம், வாழ்க்கை மற்றும் நோக்கம் ஆகியவை தேவனுடன் இணைந்திருக்கும்போது, ஜெபம் பிரவாகித்து வருகிறது என்று போதிக்கிறது.

தேவனால் பதிலளிக்கப்படும் ஜெபங்களின் வகைகளை தியானிப்போம்.

தகுந்த நோக்கமுள்ள ஜெபம்

"நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" (யாக்கோபு 4:3)

நாம் எவைகளைக் கேட்கிறோம் என்பதைக் காட்டிலும் ஏன் கேட்கிறோம் என்பதைக் குறித்தே தேவன் அதிக அக்கறையாயிருக்கிறார். பிதா, நல்ல ஈவுகளைக் கொடுப்பதற்குப் பிரியமாயிருக்கிறார் என்று வாக்குக் கொடுத்து, இயேசு, தம் சீஷர்களை தைரிய

Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org
Pauldhinakaranofficial

மாகக் கேட்கும்படி ஊக்கப்படுத்தினார். ஆனாலும், சுயத்தினாலோ, தனிப்பட்ட விருப்பத்தாலோ ஏறெடுக்கப்படும் ஜெபங்கள், தேவனுடைய இருதயத்துடன் இணைக்கப்படாதிருப்பதால் பெரும்பாலும் அவற்றுக்கு பதில் கிடைப்பதில்லை என்ற தெளிவான விளக்கத்தை யாக்கோபின் நிருபம் கொடுக்கிறது.

1 சாமுவேல் முதல் இரண்டு அதிகாரங்களிலுள்ள அன்னாளின் கதை, தகுந்த நோக்கத்தோடு ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தை அழகாக விவரிக்கிறது. பல ஆண்டுகள் குழந்தை இல்லாத நிலையில் அவள் ஆவி முறிந்திருந்தது. கசப்பைக் காட்டுவதற்குப் பதிலாக அவள் தன் வேதனையை கர்த்தருக்கு முன் ஊற்றினாள். அவளது வேண்டுதல் முற்றிலும் தனிப்பட்டது. ஆனால், முழுவதும் அர்ப்பணிப்புடன் செய்யப்பட்டது. சமுதாய அழுத்தத்தை திருப்திப்படுத்தவோ, உணர்வு ரீதியான ஏக்கத்தைப் போக்கவோ அவள் குழந்தையை கேட்க வில்லை; மனமுவந்து தேவனுக்கு திரும்ப தருவதற்காகவே அவள் ஒரு மகனை கேட்டாள். சாமுவேல் பிறந்தபோது, அன்னாள் தன் பொருத்தனையை நிறைவேற்றினாள். ஓர் அற்புதத்தைப் பெற்றதினால் அல்ல; அதன் வாயிலாக தேவன் கனமடைந்ததற்காக அவள் சந்தோஷமடைந்தாள்.

மாயவித்தைக்காரனான சீமோன் என்பவன் மாறுபட்ட உதாரணமாக நிற்கிறான் (அப்போஸ்தலர் 8:9-24). தேவ வல்லமையை அவன் கண்டபோதிலும், தன்னை உயர்த்திக்கொள்ளவே அவன் விரும்பினான். ஆவிக்குரிய அர்ப்பணிப்பு இல்லாமல் ஆவிக்குரிய அதிகாரத்தை விரும்பினான். அவன் வேண்டுதல் கடிந்துகொள்ளப்பட்டதுடன், தேவன் தம் சுபாவத்துடன் முரண்படும் நோக்கத்தை ஒரு போதும் ஆதரிக்கமாட்டார் என்ற சத்தியமும் வெளிப் படுத்தப்பட்டது.

சென்னையை சேர்ந்த அஞ்சலி என்ற சகோதரி, இதுபோன்றே அர்ப்பணித்தார்கள். திடீரென்று வந்த காய்ச்சல், தீவிரமடைந்தது. அவர்கள் ஒரு மணி நேரம் மாத்திரமே உயிரோடு இருப்பார்கள் என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். அவர்கள் குடும்பத்தினர் நம்பிக்கையிழந்து திகைத்தாலும் தேவனிடம் முறையிட்டார்கள். அவர்களது இளைய பிள்ளை, ஆறுதலை தரும்படி ஜெபிக்காமல், இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் சாட்சி கூறி தேவ நாமத்தை மகிமைப்படுத்துவதாக கூறி ஜெபித்தது, தூய இருதயத்திலிருந்து எழுந்த அந்த ஜெபத்திற்கு உடனே பதில் கிடைத்தது. அஞ்சலி சுகம்பெற்றார்கள். அவர்கள் குடும்பத்தினர் தேவனுடைய இரக்கத்தைக் குறித்து வெளியரங்கமாக சாட்சி கொடுத்தனர்.

சரீர சுகத்தைப் பற்றிய அற்புதத்தை மட்டுமல்ல; தம் நாம மகிமைக்காக ஏறெடுக்கப்படும் ஜெபத்திற்கு தேவன் பதிலளிக்கிறார் என்பதையும் இது காட்டுகிறது.

விசுவாசமுள்ள ஜெபம்

“நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்” (மத்தேயு 21:22)

ஜெபத்தில் விசுவாசத்தின் பங்கை வேதம் வலியுறுத்துகிறது. விசுவாசம், குருட்டு நம்பிக்கையல்ல; தேவனின் சுபாவத்தின்மேல் வைக்கும் நம்பிக்கையாகும். பதில் பெறுவதற்கான வாசலை திறக்கும் விசுவாசத்துடன், தம்மிடம் நம்பிக்கையாய் வந்தவர்களைக் குறித்து இயேசு மீண்டும் மீண்டும் நினைவுப்படுத்துகிறார். விசுவாசம் இல்லாத ஜெபம் வெறும் வார்த்தைகளே. விசுவாசத்தோடு செய்யப்படும் ஜெபம், பரலோகத்தையும் பூமியையும் இணைக்கிறது.

உள்ளத்தைத் தொடும் ஒரு சம்பவத்தை சுவிசேஷ பகுதியில் காணலாம். ஒரு தகப்பன், அலைக்கழிக்கப்பட்ட தன் மகனை இயேசுவிடம் கொண்டு வந்தான் (மாற்கு 9:14-29). நம்பிக்கைக்கும் சந்தேகத்திற்கும் இடையே ஊசலாடியவனாக, அவன், “ஆண்டவரே, நான் விசுவாசிக்கிறேன். என் அவிசுவாசம் நீங்கும்படி உதவும்” என்று கூப்பிட்டான். இயேசு அவனை தள்ளிவிடவில்லை. மாறாக, கொஞ்சமாயிருந்தாலும் உண்மையாயிருந்த அவனது விசுவாசத்தை கனப்படுத்தினார்; வாலிபனை விடுவித்தார். இந்த சம்பவம், பூரண விசுவாசம் இல்லாவிட்டாலும் சார்ந்திருக்கும் விசுவாசமே போதுமானது என்பதை உறுதிப்படுத்துகிறது.

திருவள்ளூரைச் சேர்ந்த ஷீபா கார்த்திகா என்ற சகோதரி, இக்கட்டான சூழ்நிலையில், வாழ்க்கையை விசுவாசம் மாற்றிய அனுபவத்தைப் பெற்றிருக்கிறார். படித்துக்கொண்டிருந்த அவர்கள், படிப்பினால் ஏற்பட்ட அழுத்தத்தையும் பணக்கஷ்டத்தையும் ஒருங்கே எதிர்கொண்டிருக்கிறார்கள். தேர்வுக்கு முன்னதாக, தேவனுடைய வாக்குத்தத்தங்களை வாசித்து அறிக்கை செய்து தேர்வறைக்குள் சென்றுள்ளார்கள். தன்னை அழைத்த ஆண்டவர் தாங்குவார் என்று நம்பியுள்ளார்கள். ஆனாலும், அவர்கள் உயர்கல்விக்கு எதிர்பாராத பணக்கஷ்டத்தினால் ஆபத்து வந்துள்ளது. ஒரு நாளைக்குள் ரூ.53,000 பணம் செலுத்த வேண்டியிருந்தது. என்ன செய்வதென்றே தெரியாத நிலையில், திருவள்ளூரில் அமைந்துள்ள ஜெப கோபுரத்திற்கு சென்று ஜெபித்துள்ளார்கள். கடைசி நாளான அன்றே தேவனால் ஏவப்பட்டு அவர்கள் உறவினர் ஒருவர் நினைத்ததற்கும் அதிகமான தொகையைக் கொடுத்துள்ளார்.

விசுவாசமுள்ள ஜெபம், சவால்களை அகற்றாது; ஆனால், ஏற்ற சமயத்தில் தேவனின் அருட்கொடையை அளித்திடும் என்ற வல்லமையான சத்தியத்தை அவர்கள் சாட்சி காட்டுகிறது.

தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் கூறி ஜெபிக்கும் ஜெபம்

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" (யோவான் 15:7)

தேவனுடைய வார்த்தையுடன் இசைந்திருக்கும் ஜெபம் வல்லமையைப் பெறுகிறது. வேதாகமம், ஜெபத்திலிருந்து தனித்ததாய் இல்லை; அது ஜெபத்தின் அஸ்திபார மாயிருக்கிறது. வேத வசனங்களில் மூழ்கியிருக்கும் விசுவாசிகள், தங்கள் ஜெபத்தை தேவனுடைய வாக்குத் தத்தங்களைக் கொண்டே தொடங்குகிறார்கள். தம்மில் நிலைத்திருந்து, தம் வார்த்தைகளை தங்களுக்குள் வாசம்பண்ண அனுமதிக்கிறவர்கள் ஜெபங்களுக்குப் பதிலைக் காண்பார்கள் என்று போதிப்பதால் இயேசுவும் இந்த சத்தியத்தை உறுதிப்படுத்துகிறார் (மத்தேயு 6:33).

மரியாளுக்கும் மார்த்தாளுக்கும் இடையே நடந்த காரியம், அர்த்தமுள்ள சித்திரத்தை அளிக்கிறது. மார்த்தாள், வேலையே செய்துகொண்டிருந்தாள். மரியாளோ இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவரது வார்த்தைகளை கவனித்தாள்; அவருடைய வார்த்தை களுக்கு முன்னுரிமை அளித்தாள். அவளது நிலை பரலோகத்தோடு இசைந்திருந்த உள்ளத்தைக் காட்டியது. இயேசு, "**தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்**" (லூக்கா 10:42) என்று கூறினார்.

யோசியா என்ற ராஜா, தேவ வார்த்தையின்பேரில் காட்டிய பக்தி, நாடு முழுவதும் எழுப்புதல் உண்டாக செய்தது. அவன் ஆட்சி செய்தபோது, ஆலயத்தில் நியாயப் பிரமாண புஸ்தகம் கண்டெடுக்கப்பட்டது. யோசியா அதை அலட்சியம் பண்ணவோ, வெறுமனே பாராட்டவோ இல்லை. அவன் தன்னையே தாழ்த்தினான். தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு மனந்திரும்பினான். தேவன் உரைத்தவற்றுக்கு தன் இருதயத்தை இசையப் பண்ணினான் (2 இராஜாக்கள் 22:8-13). அவன் ஜனங்களைக் கூடி வரப்பண்ணி, வார்த்தையை பொது இடத்தில் வாசித்து, மக்களை கர்த்தருடனான உடன்படிக் கையை புதுப்பிக்கப் பண்ணினான் (2 இராஜாக்கள் 23:1-3). இதன் காரணமாக எல்லா தவறான நம்பிக்கை களும் அழிக்கப்பட்டன. தேசத்தின் ஆவிக்குரிய வழி காட்டுதல் மாற்றப்பட்டது. வேத வசனம், ஒரு தலைவரின் விருப்பத்திலும் தீர்மானத்திலும் ஆளுகை செய்தால் என்ன நடக்கும் என்பதை யோசியாவின் பதில் காண்பித்தது. ஜெபம், தன்னால் ஏறெடுக்கப்படுவதாக அல்லாமல் தேவனை மையமாகக் கொண்டதாக அமைந்திடும். அப்படிப்பட்ட ஜெபம், தாழ்மையிலிருந்து வருவதால், அதிகாரமுள்ளதாக இருக்கும்.

அமிர்தசரஸை சேர்ந்த ஹர்விந்தர் சிங் என்ற சகோதரர், இப்படி இசைந்திருப்பது அன்றாட வாழ்வில் எப்படி உதவுகிறது என்பதை விளக்குகிறார். கொடுப்பதில் உண்மையாகவும், ஜெபிப்பதில் இடைவிடாமலும் இருக்கும் அவரது குடும்பம், சொந்த வீடு வேண்டும், அவரது தாயாரின் cervical பிரச்னை குணமாகவேண்டும் என்ற இரண்டு தேவைகளுக்காக தேவனை தேடியது. அவர்கள் ஏனோதானோவென்று வேண்டிக்கொள்ளாமல் தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் கூறி விசுவாசத் தோடு ஜெபித்தார்கள். இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத் தில் ஜெப வீரர்கள் ஏறெடுத்த ஜெபத்தினால், தீர்க்கதரிசன நிச்சயத்தால் தேவன் இரண்டு தேவைகளையும் நிறை வேற்றினார். ஜெப வீரர் ஒருவர், ஹர்விந்தர் சிங்கின் தாயார் அவர்கள் புது வீட்டுக்குச் சென்றதும் சுகம் பெறுவார்கள் என்று தீர்க்கதரிசனமாகக் கூறினார். அதைச் சொல்லி ஜெபித்தபோது தேவன் அந்த தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றினார். அவர்கள் புதுவீட்டுக்குள் சென்றதும், தேவன் உரைத்தவாறே அவரது தாயார் பூரணமாய் குணமடைந்தார்கள்.

வேத வசனங்களின்படி ஏறெடுக்கப்படும் ஜெபம் உடனடியாக நிறைவேறும் என்று இந்த சாட்சி விளக்குகிறது.

தேவ சித்தத்துடன் இசைந்த ஜெபம்

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிற படியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெரு மூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்த வான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்" (ரோமர் 8:26, 27)

ஜெபத்திற்குப் பதில் பெற இன்னொரு முக்கியமான காரியம், தேவனுடைய சித்தத்தை அறிவதற்கான விவேகமாகும். மனுஷீக திட்டங்கள், ஓர் எல்லைக்குட் பட்டவை; ஆனால், தேவனுடைய நோக்கங்கள் நித்தியமானவை. தேவனுடைய பரிபூரண சித்தத்தின்படி விசுவாசிகள் ஜெபிப்பதற்கு, உதவியாக பரிசுத்த ஆவியா னவர் அவர்களுக்காக வேண்டுதல் செய்கிறார் என்ற நிச்சயத்தை வேதம் கொடுக்கிறது. தனிப்பட்ட விருப்பங் களை ஒடுக்குவதாக இதற்கு அர்த்தமல்ல; மாறாக, அவற்றை தெய்வீக ஞானத்திற்கு ஒப்புக்கொடுப்பது என்றே அர்த்தம்.

ராஜாவாக அபிஷேகிக்கப்பட்ட தாவீது, தீர்மானங் களை எடுக்கும் முன்பாக மீண்டும் மீண்டும் தேவனு டைய வழிகாட்டுதலை நாடினான். யுத்தமானாலும் தலைமைத்துவ தெரிவாக இருந்தாலும் தன் போக்கில் நடக்க மறுத்தான். அவன் பெற்ற வெற்றிகள், கீழ்ப்படித லும் கர்த்தரை தேடுகிறவர்களுக்குக் கிடைக்கும் வெற்றிக் கும் ஆதாரமாக அமைந்தன. தாவீதின் வாழ்க்கை, தெய்வீக அழைப்பானது, தினமும் தேவனை சார்ந்திருப் பதற்கு மாற்றாக அமையாது என்று உணர்த்துகிறதை புரிந்துகொண்ட தலைவனின் வாழ்க்கைக்கு உதாரண

மாக அமைந்தது. அபிஷேகிக்கப்பட்ட ராஜாவாக இருந்த போதும், அவன் நடவடிக்கை எடுக்கவும், குறிப்பாக தலைமைத்துவ பொறுப்பு சார்ந்து முரண்பாடுகள் ஏற்பட்ட தருணங்களில் கர்த்தருடைய வழிகாட்டுதலை தேடினான். பெலிஸ்தர்களை எதிர்கொண்டபோது, தாவீது முன்பு பெற்ற வெற்றிகளையோ இராணுவத்தின் பெலத்தையோ சார்ந்திராமல், யுத்தத்திற்குச் செல்லலாமா என்றும், ஒவ்வொரு முறையும் தேவனுடைய விசேஷித்த கட்டளைக்காகவும் கர்த்தரிடம் விசாரித்தான் (1 சாமுவேல் 23:1-5; 2 சாமுவேல் 5:18-25). ராஜாவாக இருந்தும் தன்போக்கில் அல்லது தனிப்பட்ட குறிக்கோளுடன் நடப்பதை மறுத்து யூகத்தைக் காட்டிலும் கீழ்ப்படிதலை தெரிந்துகொண்டான். தேவனுடைய சித்தத்தை நாடிய அவனுடைய இந்த நடத்தை, அவனது வெற்றிக்கு அஸ்திபாரமாக விளங்கியது; தொடர்ந்து கர்த்தரிடம் விசாரித்து அவரது வழிகாட்டுதலுக்கு தன்னை ஒப்படைத்த தலைமைத்துவம் பெறும் உண்மையான வெற்றியை விளக்குவதாக அமைந்தது. தேவனுடைய சித்தத்தை தேடும் ஜெபங்களுக்குத் தேவன் நிச்சயமாய் பதில் கொடுப்பார்.

பெங்களூருவை சேர்ந்த குளோரி அருண் என்ற சகோதரியின் பயணமும் இதே காரியத்தை வெளிப்படுத்துகிறது. அவர்கள் எந்தத் தொழிலை தொடருவது என்று முடிவெடுக்க முடியாத நிலையில் இருந்தார்கள். பெங்களூரு ஜெப கோபுரத்தில் அவர்கள் தேவனுடைய வழிகாட்டுதலை தேடினார்கள். ஜெபித்தபோது குழப்பம் மறைந்து தெளிவு கிடைத்தது. தேவன் ஒரு திட்டத்தை வெளிப்படுத்தினார்; அவர்கள் விசுவாசத்தோடு அடியெடுத்து வைத்தார்கள். குடும்பத்தின் ஆதரவு இல்லாமலே, தன்னை வழிநடத்திய தேவனை நம்பியே தொழிலை (boutique) ஆரம்பித்தார்கள். இன்று அவர்கள் சாட்சியாக இருக்கிறார்கள். தேவன் தம் திட்டத்தை வெளிப்படுத்தும்போது, அவர் அதற்கான வாசலைத் திறப்பதோடு, அதில் நடப்பதற்கான பெலனையும் தருகிறார்.

> “நீங்கள் எதைக் கேட்கிறீர்கள் என்பதல்ல; என்ன நோக்கத்தோடு கேட்கிறீர்கள் என்பதே பதிலைக் கொண்டுவரும்”

தேவனுக்குப் பிரியமாய் வாழ்கிறவரின் ஜெபம்

“பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்” (1 யோவான் 3:21,22)

எசேக்கியாவின் வாழ்க்கை இதை நேர்த்தியாக சித்திரிக்கிறது. அவன் மரணத்தை எதிர்கொண்டபோது, கர்த்தரிடம் கண்ணீரோடு திரும்பி, தான் உண்மையாக நடந்ததை நினைவுப்படுத்தினான். தேவன், இரக்கத்துடன் அவனுக்குப் பதில் அளித்து வாழ்க்கையை நீட்டித்தார். எசேக்கியா ராஜா கொடும் வியாதிப்பட்டபோது, அவன் அவநம்பிக்கையடையாமலும் மனுஷீக தீர்வுகளைத் தேடாமலும் கண்ணீரோடு கர்த்தரைத் தேடினான்; அவருக்கு முன்பாக தான் உண்மையாக நடந்ததை நினைவுப்படுத்தினான் (2 இராஜாக்கள் 20:1-6; ஏசாயா 38:1-5). தேவன் அவன் ஜெபத்திற்குச் செவிகொடுத்தார்; அவன் கண்ணீரைக் கண்டார்; கிருபையாக அவன் வாழ்க்கையில் பதினைந்து ஆண்டுகளைக் கூட்டினார்.

அதேபோன்று சாலொமோன் செலுத்திய சர்வாங்க தகனபலி, தேவன்பேரில் பக்திகொண்ட அவன் இருதயத்தைக் காட்டியது. கர்த்தர் அவனுக்கு ஞானத்தையும் ஐசுவரியத்தையும் கனத்தையும் கொடுத்தார். சாலொமோன், கிபியோனில் ஆயிரம் தகனபலிகளைக் கர்த்தருக்குக் கொடுத்து தேவன் பேரிலான தன் அன்பை வெளிப்படுத்தினான் (1 இராஜா. 3:3-13). சாலொமோனின் முழு உள்ளத்தாலான பக்தியில் பிரியப்பட்ட தேவன், அவன் விரும்புகிறதைக் கேட்கும்படி அழைத்தார். சாலொமோன் தனிப்பட்ட லாபத்தை அல்லாமல் ஞானத்தைக் கேட்ட போது, கர்த்தர் அவனுக்கு ஞானத்தை அருளியதோடு, அவன் கேட்டதற்கும் அப்பால் ஐசுவரியத்தையும் கனத்தையும் கொடுத்தார்.

இந்த இரு கதைகளும், வாழ்வில் உண்மையும், கீழ்ப்படிதலும், பக்தியும் காணப்படுமானால், தேவன் கேட்டுக்கொள்வதால் அன்றி பிரியத்தோடு உதாரத்துவமாய் பதில் அளிப்பார் என்பதைக் காட்டுகின்றன.

நவீன காலத்தில், எஸ். ஆர். பூங்கொடி என்ற சகோதரியின் சாட்சி, தேவனுக்கு பிரியமான இருதயம் ஜெபத்தை எப்படி மறுரூபப்படுத்துகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. அவர்கள் சென்னையில் வசிக்கிறார்கள். இல்லறத்தில் பல ஆண்டுகள் காணப்பட்ட முரண்பாட்டால் வீட்டை வேதனை நிரப்பியிருந்தது. அவர்கள் சமைக்கும் சாப்பாட்டை அவர்களது கணவர் சாப்பிடாமல், உணர்வுரீதியாக தன்னை தனிமைப்படுத்திக்கொண்டார். கசப்பினால் இருதயத்தைக் கடினப்படுத்த அனுமதியாமல், அந்த சகோதரி தேவனை பற்றிக்கொண்டார்கள். ஒருநாள், ஃபேமிலி சேனலில் இயேசு அழைக்கிறார் நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். என் அம்மா சகோதரி ஸ்டெல்லா தினகரன், சமாதானத்தைக் குறித்துப் பிரசங்கித்துக்கொண்டிருந்தார்கள். அந்தச் செய்தி அவர்கள் இருவரையும் தொட்டது. சிறிது சிறிதாக கசப்பு கரைந்தது; பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அவர்கள் இல்லத்தில் சமாதானம் திரும்பியது.

தேவன், ஒப்புரவையும் நீதியையும் தேடிய இருதயத்தை கனப்படுத்தினார்.

கனி நிறைந்த வாழ்க்கையோடு ஏறெடுக்கப்படும் ஜெபம்

“நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான்

உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத் தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்'' (யோவான் 15:16)

இறுதியாக, கனி நிறைந்த வாழ்க்கை வாழும் ஒருவர் ஏறெடுக்கும் ஜெபங்களுக்கு பதில் கிடைக்கும் என்பதை வேதம் வெளிப்படுத்துகிறது. விசுவாசிகள் நித்திய நோக்கங்களுக்கான, மற்றவர்களுக்கு ஊழியம் செய்தல், தேவனுடைய வேலைக்கென உதாரத்துவமாக கொடுத்தல், தேவனுடைய அன்பை பகிர்ந்துகொள்ளுதல் போன்றவற்றிற்காக ஜெபிக்கும்போது, தேவன் பரிபூரண மாக அருளிச்செய்கிறார்.

ஊக்கமான ஜெபமும் உதாரத்துவமான கீழ்ப்படிதலும் இணையும்போது தேவனுடைய மீட்பின் பதில் கிடைக்கும் என்பதற்கு கொர்நேலியு நல்ல உதாரணம். அவனுடைய ஜெபங்களும், உதாரத்துவமான தர்மங் களும் தேவனுக்கு முன்பாக நினைப்பூட்டுதலாக எழும்பின. அதற்குப் பதிலாக, தேவன், அவனுக்கு மட்டுமல்ல, அவன் வீட்டார் அனைவருக்கும் இரட்சிப்பை கொடுத்தார். தேவனுக்குப் பயந்த, பக்தியுள்ள மனுஷன் எப்படி இடைவிடாமல் ஜெபிக்கிறான் என்பதையும், தேவையிலுள்ளோருக்கு உதாரத்துவமாக கொடுக்கிறான் என்பதையும் வேதம் விளக்குகிறது (அப்போஸ்தலர் 10:1,2). சுவிசேஷத்தோடு அவன் முழுவதும் தொடர்பில் இல்லாவிட்டாலும் அவன் ஜெபங்களும் தான தர்மங் களும், தேவனுக்கு நினைப்பூட்டுதலாக சந்நிதியில் வந்தெட்டின என்பது அவனது பக்திக்குரிய வாழ்வு பரலோகத்தின் கவனத்தை ஈர்த்தது என்பதைக் காட்டு கிறது (அப்போஸ்தலர் 10:4). பதிலாக, தேவன், பேதுருவை அழைக்கும்படி ஒரு தூதனை அனுப்பி கொர்நேலியுவுக்கு கூறினார்; பேதுரு மூலமாக அவன் வீட்டார் அனைவரும் இரட்சிப்பின் செய்தியைக் கேட்டனர் (அப்போஸ்தலர் 10:30-44). அவர்கள் விசுவாசித்தபோது, பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் ஊற்றப்பட்டார். அது கொர்நேலியுவின் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்ததோடு புறஜாதிகளுக்கு சுவிசேஷம் விரிவு படுத்தப்படுவதற்கும் தொடக்கமாக அமைந்தது. அவனது கதையானது, மனதுருக்கமுள்ள கீழ்ப்படிதலோடு ஜெபம் ஏறெடுக்கப்படும்போது, முதலில் கேட்கப்பட்டதைத் தாண்டி அது வல்லமையான இரட்சிப்பையும் மறுரூபத் தையும் கொண்டு வரும் என்று அழகாக விளக்குகிறது.

புதுடெல்லியின் வசிக்கும் ராகேஷ் குமார் என்ற சகோதரரின் வாழ்க்கை, ராஜ்யத்திற்கான ஜெபத்தை காட்டுகிறது. 2016ம் ஆண்டு அவரும், அவர் மனைவியும் அவநம்பிக்கையால் சூழப்பட்ட நிலையில் தற்கொலை செய்துகொள்ள தீர்மானித்தனர். ஒரு கனவில் இயேசுவை தரிசித்த பின்னர் ஜெப கோபுரத்திற்கு தவறாமல் வரத் தொடங்கினர். விசுவாசத்தில் வளர்ந்த அவர், கொடுப்பதி லும் ஆவிக்குரிய ஒழுக்கத்திலும் உண்மையாயிருக்க தன்னை அர்ப்பணித்தார். இயேசு அழைக்கிறார் ஜெப கோபுர ஊழியத்திற்கு தன் தசமபாகத்தை தவறாமல் கொடுக்க ஆரம்பித்தார். அந்த சமயம் அவர் மனைவி

பெண் பாதுகாவலராக (security guard) வேலை செய்து கொண்டிருந்தார். 25 ஆண்டுகள் கழித்து தேவன் அவர் குடும்பத்தை மறுரூபப்படுத்தி, மனைவியை வேலையில் உயர்த்தினார்; ஒரு பள்ளிக்கு அவர்களை முதல்வராகும் படி செய்தார்; நெடுங்காலம் வாடகை வீட்டில் இருந்த அவர்களுக்கு சொந்த வீட்டைக் கொடுத்தார்.

அவரது சாட்சி, ஜெபங்களுக்கு நினைத்துப் பார்த்திராத பதில்கள் கிடைப்பதன் வாயிலாக விசுவாசத்தில் விதைத்த வற்றை சந்தோஷத்துடன் அறுப்பதை தெரியப்படுத்து கிறது. விசுவாசிகளாகிய நாம், ஜெபங்களுக்குக் கிடைக் கும் பதிலானது சுய முயற்சிக்கு ஆதாரமல்ல; தேவனு டைய அனுமதிக்கு உதாரணம் என்பதை மறக்கக்கூடாது. தம் வார்த்தையை காத்துக்கொள்ள தேவன் கிருபையுள் ளவராகவும் உண்மையுள்ளவராகவும் இருக்கிறபடியால் தம் பிள்ளைகளை ஆசீர்வதிப்பதில் அவர் பிரியமாயிருக் கிறார். சுத்தமான நோக்கங்களுடன், அசையாத விசுவா சத்துடன், வேத வசனங்களுக்கு இசைந்ததாய், அவரது சித்தத்திற்கு அர்ப்பணிப்புடன், கீழ்ப்படிதலுடன் வாழ்ந்து, தேவ ராஜ்யத்தின் நோக்கத்திற்காக ஏறெடுக்கப்படும் ஜெபங்களுக்கு எதிர்பார்க்கிறதற்கும் மேலான பலனை தேவன் கொடுக்கிறார் (எபேசியர் 3:20). வெறுமனே பதில்களைப் பெறுவதற்காக அல்லாமல் தேவன் யார் என்பதை அறிந்துகொள்ளும்படி தீவிர வாஞ்சையாக, அவரிடமிருந்து பதில்களைப் பெற்றுக்கொள்வதற்குக் கற்றுக்கொள்ளுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஜெபம்: ஆண்டவராகிய இயேசுவே, நான் ஜெபிக்கும் போது நீர் செவிகொடுக்கிறதற்காக உம்மை ஸ்தோத்திரிக் கிறேன். சுத்தமான நோக்கங்களுடனும் நம்பிக்கையுள்ள உள்ளத்துடனும் உம்மிடம் கேட்பதற்கு எனக்குக் கற்றுக் கொடுத்தருளும். உம் வார்த்தையை விசுவாசிக்கவும், உம்முடைய வாக்குத்தத்தங்களை கூறி ஜெபிக்கவும் எனக்கு உதவி செய்தருளும். பரிசுத்த ஆவியானவர் வாயி லாக உம் சித்தத்தை வெளிப்படுத்தும். ஆண்டவரே, என் வாழ்க்கை, உம் ராஜ்யத்திற்காக கனி கொடுக்கவும், என் ஜெபங்களுக்கு நீர் பதில் அளிப்பதால், என் வாழ்க்கை சந்தோஷத்தால் நிரம்பியிருக்கவும் செய்யும். உம்முடைய இரக்கத்தில் மாத்திரமே நான் களிகூர்ந்து, உம் விலையேறப்பெற்ற நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.

இயேசு அழைக்கிறார் ராஞ்சி ஜெப கோபுரம் முழுமையாக புதுப்பிக்கப்படவேண்டும், கீழ்கள் உதவுவீர்களா?

கர்த்தருடைய வீட்டைக் கட்டுங்கள்; கர்த்தர் உங்கள் வீட்டைக் கட்டுவார்

ஆறுதல், சுகம், வழிகாட்டல் தேடி வருகிற அனைத்து மக்களின் வாழ்க்கையிலும் பலத்த அற்புதங்கள் நடப்பதற்கு இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள் உதவுகின்றன.

பிரச்னைகள் நிறைந்த வாழ்க்கை மறுரூபமானது

எனக்கும், என் கணவர் ஸ்ரீனிவாசனுக்கும் இரண்டு பிள்ளைகள் ஆசீர்வாதமாக கொடுக்கப்பட்டுள்ளனர். நான் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் முன்னர் என் வாழ்க்கை வேதனையும் போராட்டங்களும் நிறைந்ததாக இருந்தது. என் கணவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். மனரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் அநேக பாடுகளை நான் அனுபவித்தேன். ஒரு கட்டத்தில் என் மகன் டெங்கு காய்ச்சலின் தீவிர பாதிப்புக்குள்ளாகி, அவனுடைய இரத்தத் தட்டுகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துபோனது. மருத்துவர்கள் மகனின் உயிருக்கு ஆபத்து என்று கூறிவிட்டார்கள். அந்தத் தருணத்தில் நான் அருகிலிருந்த இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்துக்குச் சென்று, முழு உள்ளத்தோடு ஜெபித்தேன். தேவன் எல்லா ஜெபங்களையும் கேட்டு என் மகனை சுகப்படுத்தினார்; என் கணவரை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். எங்கள் வாழ்க்கையை மறுரூபமாக்கினார். இன்று நாங்கள், தேவ கிருபையாலும் எங்களுக்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபங்களாலும், குடும்ப வாழ்க்கை சீர்ப்படுத்தப்பட்டவர்களாக, ஆசீர்வாதமாக வாழ்கிறோம். – அனிதா.

தினசரி ராஞ்சி ஜெப கோபுரத்துக்கு வரும் ஏராளமான சாட்சிகளுள் இதுவும் ஒன்று.

ராஞ்சி ஜெப கோபுரம், முழு ஜார்க்கண்ட் மாநிலத்துக்கும் நம்பிக்கை அளிப்பதாக விளங்கி வருகிறது. கடந்த ஆண்டு இந்த ஜெப கோபுர ஊழியத்தின் மூலம் 37,500 பேரை சந்தித்தோம். வரும் 2026 ஆண்டில் 50,000 ஆத்துமாக்களை சந்திப்பதற்கு எதிர்பார்க்கிறோம்.

இத்தனை ஆத்துமாக்களை சந்திப்பதற்கு ராஞ்சி ஜெப கோபுரத்தின் வசதிகளை மேம்படுத்தப்படவேண்டும். LED விளக்குகளோடு அரங்கத்தை புதுப்பிக்கவேண்டும், குளிர்சாதன வசதி (AC), மேடை, ஓய்வறைகள், AV அறைகள், பொதுக்கூட்டங்களை நடத்தும்போது பயன்படுத்தக்கூடிய அறைகள், வாலிபர் ஆராதனை, சிறுவர் ஊழியம், பயிற்சி, தொலைபேசி ஜெப கோபுரத்திற்கு கூடுதல் இருக்கைகள், அதிகமான ஆலோசனை அறைகள், அமைதியான தியான அறை போன்றவை அமைக்கப்படவேண்டும்.

புதுப்பிக்கும் பணிகளைச் செய்வதற்கு 3 கோடி ரூபாய் தேவை

நீங்கள் ☐ ரூ. 5,00,000 ☐ ரூ.3,00,000 ☐ ரூ.1,00,000
☐ ரூ. 50,000 ☐ ரூ.25,000 ☐ ரூ. 10,000 ☐ ரூ. 5,000
அல்லது ஆண்டவர் உங்களை வழிநடத்தும் எந்தத் தொகையும் வழங்கலாம்.
வாருங்கள். ஆண்டவர் ராஞ்சி மக்களை ஆசீர்வதிப்பதற்கு நாம் அழகிய ஜெப கோபுரத்தைக் கட்டுவோம். கர்த்தருடைய வீட்டைக் கட்டுங்கள்; கர்த்தர் உங்கள் வீட்டைக் கட்டுவார் (2 சாமுவேல் 7:11)

மேலும் விவரங்களுக்கு: boranchi@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 63807 52243 (காலை 8 முதல் 8 மணி வரை) என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

ராஞ்சி ஜெப கோபுர கட்டுமான நிதிக்கு நன்கொடை அளித்திடுங்கள்

நல்ல நிர்வாக அனுபவமும், ஊழியக்குழுவை வழிநடத்த வாஞ்சையும், ஆவிக்குரிய வரமும் கொண்ட **முதுநிலை மேலாளர் தேவை.**
உங்களைப் பற்றிய விவரங்களை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி: careers@jesuscalls.org

குடும்ப பகுதி

உங்கள் வீடு சமாதானத்தினால் நிரம்பியிருக்கும்

''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' (மத்தேயு 11:28)

அன்பானவர்களே, கவலை, பயம், நிச்சயமின்மை இவைகளால் பாரப்பட்டிருக்கிற உங்கள் இருதயத்தை நோக்கி தேவன் இந்த அழைப்பை விடுக்கிறார். நாம், அவரால் மட்டுமே தரக்கூடிய இளைப்பாறுதலை தேடி, பாரங்களுடன் அவரிடம் வருகிறோம். உங்கள் எதிர்காலம் பாழாகிவிட்டது; உங்கள் வாழ்க்கையில் இருள் சூழ்ந்து விட்டது; உங்கள் அன்பானோரின் மறைவு என்னும் இழப்பிலிருந்து ஒருபோதும் மீள முடியாது என்று நீங்கள் நினைக்கலாம். ''எனக்கு என்ன நம்பிக்கை உள்ளது?'' என்று நீங்கள் கேட்கலாம். இன்று, தம்மிடம் வரும்படி இயேசு உங்களை அழைக்கிறார். நாம் எதிர்கொள்ளும் பிரச்னையைக் காட்டிலும் நம் அன்பு தேவன் பெரியவராயிருக்கிறார். அவர் நமக்குள் வாசம்பண்ணுகிறார் என்று நம்பி, கவனமுடன் வாழ நினைக்கும்போது, அவர் நம் துக்கத்தை இரட்சிப்பின் கெம்பீர சத்தமாக மாற்றுகிறார். நம் வாழ்க்கையை மறுரூபமாக்குகிறார். ஆகவே, உங்கள் பாரங்களையெல்லாம் இயேசுவின் பாதத்தில் வைத்து விடுங்கள். அவர் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவார்; உங்களைக் குணமாக்குவார். ஜெபத்தினாலும் உண்மையான வேண்டுதலினாலும் உங்கள் போராட்டங்கள் எல்லாவற்றிலிருந்தும் அவர் உங்களை வெளியே கொண்டுவருவார். மனச்சோர்வு, தேவனைக் காட்டிலும் பெரியதல்ல. அது ஆவிக்கும் மனதுக்கும் இடையேயான போராட்டம். ஆனால், தேவன் உங்களுக்கு வெற்றியைத் தருவார்.

சிலிகுரியில் (மேற்கு வங்காளம்) ஜார்க்கண்டை சேர்ந்த ராஜீப் ஹெம்ராம் குமார் வசித்து வருகிறார். அவர், ''நான் வேலையினிமித்தம் என் மனைவியையும் இரண்டு மகள்களையும் பிரிந்து வசித்து வருகிறேன். சில ஆண்டுகளுக்குமுன்பு எனக்கு கடும் மனச்சோர்வு ஏற்பட்டது. தூக்கமின்றி தவித்தேன். பயம் என்னை பிடித்தது. என் மனைவியும்கூட சமாதானத்தையும் பெலனையும் இழந்து மௌனமாக வேதனை அனுபவித்தாள். மருத்துவர்கள் மருந்துகளை பரிந்துரைத்தனர். நாங்களோ, ஜெபம் மட்டுமே எங்கள் ஆத்துமாவை குணமாக்கும் என்று உணர்ந்து, பயத்தைவிட்டு, விசுவாசத்தோடு தேவனிடம் முறையிட்டோம். இயேசு அழைக்கிறார் ஜெப வீரர்கள் எங்களுக்காக ஊக்கமாக ஜெபித்தனர். இப்போது என் மனைவி ஆரோக்கியமாக,

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

சந்தோஷமாக இருக்கிறாள். நாங்கள் குடும்பமாக சமாதானத்துடன் வாழ்ந்து வருகிறோம். மனச்சோர்விலிருந்து எங்களை விடுவித்து எங்கள் வாழ்வை புதுப்பித்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஸ்தோத்திரிக்கிறோம்'' என்று சாட்சி கூறுகிறார்.

ஆம், அன்பானவர்களே, முதலாவது, மன சமாதானத்திற்காக ஜெபியுங்கள்; அப்போது தேவன் சமாதானத்தை அருளுவார்; மற்றவை எல்லாம் பின்னே வரும். நாம் கேட்பதற்கு முன்பே தேவன் நம் தேவைகளை அறிந்திருக்கிறார். இளம் பெண்கள், முதியவர்கள், திருமணமானவர்கள் அல்லது கணவனை இழந்தவர்கள் என்று அநேக பெண்கள் மிக அதிக பொறுப்புகளுடன் தனியே வசிக்கிறார்கள். தனிமை, மனதை சோர்வுறச் செய்யும். அதை தவிர்க்க இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும். அப்படிப்பட்ட இருளிலிருந்து தேவனால் மாத்திரமே நம்மை தூக்கியெடுக்க முடியும்.

இன்றும் ஆண்டவர் உங்களை நினைத்திருக்கிறார்; உங்களை ஆசீர்வதிக்க பிரியமாயிருக்கிறார். வேதம், ''**கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா**'' (சங்கீதம் 127:1) என்று கூறுகிறது. ஒரு வீட்டை தேவன் கட்டும்போது, அதை வெறுமனே கட்டடமாக மாத்திரம் கட்டுவதில்லை. அவர் வாழ்க்கையை, குடும்பங்களை, சரீரங்களை, மனங்களை, ஆத்துமாக்களை உருவாக்குகிறார். ''இயேசு அழைக்கிறார் பங்காளராக இணைந்த பிறகு ஆண்டவர் எங்கள் வீட்டைக் கட்டியுள்ளார்'' என்று பங்காளர்கள் சாட்சி கூறுவதை அடிக்கடி கேட்கிறோம்.

சென்னை ஜெப கோபுரத்தில் அப்படி ஒரு வல்லமையான சாட்சி நடந்தது. ஆட்டோ டிரைவராகிய தன் கணவர் குடிக்கிறார்; ஒருபோதும் தன்னுடன் சேர்ந்து ஜெபிக்க வரமாட்டார் என்று மெர்சி என்ற பெண்மணி கூறினார்கள். ஆனால், அவர்கள் அத்துடன் விடவில்லை. செவ்வாய்க்கிழமைதோறும் உபவாசத்தோடு ஜெப கோபுரத்திற்கு வந்து, தேவனுடைய வார்த்தையைக் கருத்தாய் வாசித்து ஜெபித்தார்கள். கணவரின் விடுதலைக்காக போராடி ஜெபித்ததற்கு தேவன் பதில் கொடுத்தார். அவர்களுடைய கணவர் பாலா கூறும் பொழுது, ''நான் குடிப்பழக்கத்தை விட்டு வெளியே வரவேண்டும் என்று என் மனைவியும், மகளும் பல ஆண்டுகளாக போராடினார்கள். ஆட்டோ டிரைவராகிய எனக்கு குடிப்பழக்கமும் இருந்ததால் கடனில் விழுந்தேன். வீட்டில் எப்போதும் சண்டை வந்து, சமாதானமே கிடையாது. என் மனைவி செவ்வாய்க்கிழமை தோறும் ஜெப கோபுரத்திற்கு தவறாமல் சென்று உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டு ஜெபிப்பாள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவள் கூப்பிடுதலைக் கேட்டு, என்னை முற்றிலுமாக மாற்றினார். நான் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றேன்; எல்லா கடன்களும் அடைக்கப்பட்டன; இப்போது என் வீடு சமாதானத்தினால் நிறைந்திருக்கிறது'' என்றார்.

அதே மனிதர் இப்போது, மற்றவர்களை ஜெப கோபுரத்திற்கு அழைத்து வருவதோடு, அவர்கள் உள்ளே வருகிறார்களா? அமருகிறார்களா? ஜெபிக்கிறார்களா? என்பதையும் கவனிக்கிறார். ''உண்மையாகவே ஆண்டவர் என் வீட்டைக் கட்டியுள்ளார்'' என்று சந்தோஷமாக அவர் கூறினார். அன்பானவர்களே, ஆண்டவர் உங்கள் வீட்டையும் கட்டமாட்டாரா? உங்கள் கணவரின் / மனைவியின் மனம் மாறுவதற்காக, உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக, உங்கள் சொந்த வாழ்வில் நல்ல மாற்றத்திற்காக நீங்கள் ஜெபித்துக்கொண்டிருக்கலாம். இந்த மாதம் உங்கள் சூழ்நிலைக்குள் வரவும், உங்கள் வீட்டை, குடும்பத்தை, உங்களை வாழ்க்கையை கட்டவும் ஆண்டவர் விரும்புகிறார். இயேசு, ''**என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது**'' (யோவான் 15:5) என்றார். அவர் இல்லாவிட்டால் நாம் பெலனில்லாதவர்கள்; ஆனால், அவர் இருந்தால் நம்மால் எல்லாம் கூடும்.

தனிப்பட்டவிதத்தில் இந்த சத்தியத்தை என் குடும்பத்தில் கண்டிருக்கிறேன். என் தந்தை மனம் மாறுவதற்காக என் அம்மா இருபது வருடங்களுக்கு மேலாக உபவாசித்து ஜெபித்தார்கள். வெள்ளிக் கிழமைதோறும் அவர்கள் உண்மையாய் வேண்டுதல் செய்வார்கள். ஒருநாள், அவர்கள் பெயர் எதுவும் கூறாமல் தன் பிள்ளைகளுள் ஒன்றை ஆண்டவருக்கு சேவை செய்ய அர்ப்பணித்தார்கள். அந்த அர்ப்பணிப்பின் ஜெபத்தை தேவன் கனப்படுத்தினார். இப்போது நான் ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறேன்; என் அப்பாவின் மனமும் மாறியது. மெய்யாகவே ஆண்டவர் எங்கள் வீட்டை கட்டினார்.

அன்பானவர்களே, உங்கள் ஜெபங்கள் ஒன்றும் வீணாய் போகாது. காத்திருந்து களைத்துவிட்டீர்களா? மனம் தளராதிருங்கள். இன்று தேவன் கிரியை செய்வார். அவர் உங்கள் வீட்டைக் கட்டி, உங்கள் வாழ்வில் அற்புதங்களைச் செய்வார். இன்றிலிருந்து நீங்கள் மாற்றத்தைக் காண்பீர்கள். இயேசுவின் பாதத்தில் உங்கள் வாழ்க்கையை அர்ப்பணியுங்கள். உங்கள் வீட்டைக் கட்டுவதற்கு நீங்கள் தேவனுக்கு இடங்கொடுக்கும்போது, அவர் பூரணமாக அதைச் செய்து முடிப்பார். தேவன் தாமே உங்களை பூரணமாக ஆசீர்வதிப்பாராக.

உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...

ஊழியத்தில் என் அன்பு பங்காளரே,
இம்மாதத்தில் உங்களை வாழ்த்தும்போது என் உள்ளம் நன்றியாலும் நம்பிக்கையாலும் நிறைந்திருக்கிறது. நம் வாழ்வின் காலங்களை உண்மையாய் கண்காணித்துக்கொண்டிருக்கும் ஆண்டவர், தம் திட்டங்கள் நிச்சயமற்றவையோ அல்லது தற்காலிகமானவையோ அல்ல என்று நமக்கு நினைவுபடுத்துகிறார். காத்திருத்தலின் அல்லது கடந்துபோதலின் அல்லது சவாலின் காலத்திலும் தேவன், நம்மை வைத்திருக்கும் இடத்தில் கட்டுங்கள்; குடியிருங்கள்; செழித்திடுங்கள் என்று கூறுகிறார்.

"நீங்கள் வீடுகளைக் கட்டி, குடியிருந்து, தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைச் சாப்பிடுங்கள்"
(எரேமியா 29:5)

இந்த வாக்குத்தத்தம், கர்த்தர் ஸ்திரத்தன்மையை, கனி கொடுப்பதை, தம் ஜனங்களின் சமாதானத்தை விரும்புகிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது. அவர் உறுதியான அஸ்திபாரங்களை போடும்படியும், நம் கரங்களில் அவர் தந்துள்ளவற்றை பராமரிக்கும்படியும், நம் பிரயாசத்தின் பலனை அனுபவிக்கும்படியும் கூறுகிறார். தேவனுடைய வழிகாட்டுதலின்படி நாம் கட்டுவது நிலைத்திருக்கும்; விசுவாசத்தில் நாம் நாட்டுகிறவை ஏற்ற காலத்தில் நிச்சயமாகவே பலன் கொடுக்கும்.

இந்தக் காலம், உங்களுக்கும் உங்கள் வீட்டாருக்கும் தெய்வீக ஸ்தாபித்தலின் காலமாக இருக்கும் என்று உரைக்கிறேன். உங்கள் கைகளின் பிரயாசத்தை ஆண்டவர் ஆசீர்வதிப்பார்; எங்கெல்லாம் தேக்கம் காணப்படுகிறதோ அங்கெல்லாம் வளர்ச்சியைக் கொடுப்பார்; அவரது மறைவில் பாதுகாப்பாக தங்கியிருக்கும் கிருபையைத் தருவார். ஜெபித்தும் பங்களித்தும் நீங்கள் தொடர்ந்து எங்களோடு நிற்பதால், தேவன் தாமே பரிபூரணத்தை, திருப்தியை, நித்திய சந்தோஷத்தை அனுபவிக்கச் செய்வாராக.

விசுவாசத்தில் எங்களோடு பயணிப்பதற்காக உங்களுக்கு நன்றி. நாம் ஒருமித்து தேவ ராஜ்யத்தை அவரது நோக்கத்தின்படி கட்டும்போது, கீழ்ப்படிதலின் விதைகளை விதைக்கும்போது, அவர் நமக்கென்று ஆயத்தம்பண்ணியிருக்கிற பெரிதான அறுவடையில் பங்குபெறுவோம்.

கடந்த மாதத்தில் ஆண்டவர் ஊழியத்தின் வாயிலாக செய்த மகத்தான காரியங்களை குறிப்பிட விரும்புகிறேன். வரும் மாதத்திலுள்ள பெரிய ஊழியங்களுக்காக ஜெபிக்கும்படி அழைக்கிறேன்.

துதிப்பதற்கு

ஐக்கிய சந்தோஷ பெருவிழா 2026 - சென்னை நந்தனத்தில் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் 2026 ஜனவரி 4ம் தேதி புதுவருட பேரின்ப பெருவிழா நடந்தது. நானும் என் குடும்பத்தினரும் பேராயர்கள், திருச்சபை தலைவர்கள், கிறிஸ்தவ தலைவர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பல்வேறு திருச்சபையினருடனும் ஒன்றாய் இணைந்து ஜெபித்து, கூட்டத்தினரை ஆசீர்வதித்ததுடன், விசுவாச குடும்பத்தாராய் 2026ம் ஆண்டுக்கான வாக்குத்தத்தங்களையும் தீர்க்கதரிசனங்களையும் உரிமையாக்கிக் கொண்டோம். நான் ஏசாயா 58:12ம் வசனத்தை தேவனுடைய வாக்குத்தத்தமாக அறிவித்து, அவரால் வெளிப்படுத்தப்பட்ட தீர்க்கதரிசனங்களை பகிர்ந்துகொண்டேன். ஆண்டுக்கான ஒருமித்த தரிசனத்தோடு அனைவரும் பிரார்த்தனையில் இணைந்து தேவன் தம் வார்த்தையை தங்கள் வாழ்வில் நிறைவேற்றும்படி ஜெபித்தனர். நிகழ்ச்சியின் ஒவ்வொரு பகுதியிலும் தேவ நாமம் உயர்த்தப்பட்டது.

சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில்

2026 ஜனவரி 3ம் தேதி சென்னை வாலிபர் திருவிழா நடைபெற்றது. அனைவருக்குமான விளையாட்டுகள் நடத்தப்பட்டன. காருண்யா மாணவ மாணவியருடன் போதகர் பென்னி ஜோஸ்வா, என் மகள் ஸ்டெல்லா ரமோலா, மருமகன் டேனியல் டேவிட்சன் ஆகியோர் இணைந்து துதி ஆராதனை வேளையை நடத்தினார்கள். அப்போஸ்தலர் 2:17 வசனத்திலிருந்து என் மகன் சாமுவேல் தினகரன் ஊக்கமான செய்தியை வழங்கினார். கூடியிருந்த இளம் பிள்ளைகள் அனைவரும் புது விசுவாசத்தாலும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினாலும் நிரப்பப்பட்டு தங்களை அர்ப்பணித்தனர்.

புத்தாண்டு சிறப்பு கூட்டம் 2026 ஜனவரி 1ம் தேதி சகோ. டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் நடந்தது. என் மருமகன் டேனியல் டேவிட்சனும், மகள் ஸ்டெல்லா ரமோலாவும் ஆராதனையை நடத்தினர். ஸ்டெல்லா ரமோலா, 1 சாமுவேல் 2:30 என்ற வசனத்திலிருந்து தேவனுடைய ஜீவ வார்த்தையை பகிர்ந்துகொண்டார். வந்திருந்தோருக்கு, தம்மை கனம் பண்ணுகிறவர்களை கர்த்தர் கனம்பண்ணுவார் என்பதை நினைவுப்படுத்தினார். வந்திருந்தவர்கள் அனைவரும் தங்கள் இருதயத்தில் விசுவாசம் நிறைந்திருக்க, புத்தாண்டில் தேவனுடைய உச்சிதமான ஆசீர்வாதங்கள் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியோடு திரும்பினர்.

சென்னை, மந்தைவெளி, CSI தூய லூக்கா ஆலயத்தில் என் மகன் 2025 டிசம்பர் 31ம் தேதி, நள்ளிரவு புத்தாண்டு ஆராதனையில் தேவ செய்தியை பகிர்ந்துகொண்டார். அபிஷேகம் நிறைந்த அவரது செய்தியின் மூலம் தேவன் நம்பிக்கையை புதுப்பித்தார்; விசுவாசத்தை ஸ்திரப்படுத்தினார்; தைரியத்துடனும், சமாதானத்துடனும், அவரது வாக்குத்தத்தங்களின்மேல் திடநம்பிக்கை கொண்டும் புத்தாண்டினுள் நுழைவதற்கு கலந்து கொண்டோர் உள்ளங்களை ஆயத்தப்படுத்தினார்.

Heavenly Feast என்ற ஊழியத்தினால் கேரள மாநிலம், கோட்டயத்தில் நடத்தப்பட்ட CONNECT 2026 என்ற நிகழ்ச்சியில் என் தாயார் திருமதி ஸ்டெல்லா தினகரனுடனும், என் மனைவி இவாஞ்சலினுடனும் கலந்துகொள்ளும் சிலாக்கியம் கிடைத்தது. வாழ்நாள் சாதனையாளர் விருது என் தாயாருக்கு வழங்கப்பட்டது. இத்தனை ஆண்டுகளாக ஜெபம் நிறைந்த தியாகத்தினால் ஊழியத்தை ஆதரித்து வருகிறதற்கு அது அங்கீகாரமாக அமைந்தது. 2026 வாக்குத்தத்த செய்தியை அளித்து தேவனுடைய சீர்ப்படுத்தலையும் மறுபடியும் கட்டுவதையும் குறித்து அறிவித்தேன். சகோதரி இவாஞ்சலின், பரிசுத்த ஆவியினால் நிறைந்து 2026ம் ஆண்டு வெற்றிகரமாக அமைவதற்காக வல்லமையாக ஜெபித்தார். நான் Heavenly Feast ரேடியோவை பிரதிஷ்டை செய்து, தேவனுடைய அருட்கொடையை, கிருபையை, தயவை உலகெங்குமுள்ள மக்களுக்கு அறிவித்து ஆசீர்வாதமாக விளங்கும்படி ஜெபித்தேன். ஒவ்வொருவருக்காகவும் ஜெபித்து தீர்க்கதரிசனம் உரைத்து தனி ஜெபமும் செய்தோம். எங்களை அழைத்ததற்காக Dr. மாத்யூ குருவில்லாவுக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

2025 டிசம்பர் 31ம் தேதி, கோட்டயம் நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்ற CONNECT 2026 புத்தாண்டு ஆராதனையில் மாமறைதிரு தாமஸ் மார் திமோதியோஸ் மற்றும் மாமறைதிரு Dr. மாத்யூஸ் மார் செராபிம் இருவருடன் இணைந்து கிறிஸ்துவின் ஐக்கியத்தை கொண்டாடினேன்.

நாம் ஒருமித்து தேவ ராஜ்யத்தை அவரது நோக்கத்தின்படி கட்டும்போது, கீழ்ப்படிதலின் விதைகளை விதைக்கும்போது, அவர் நமக்கென்று ஆயத்தம்பண்ணியிருக்கிற பெரிதான அறுவடையில் பங்குபெறுவோம்

ஜெபிப்பதற்காக...

மாணவர் பிரார்த்தனை கூட்டம்

செயின்ட் ஜார்ஜ் பள்ளியில் மாணவர் பிரார்த்தனையில் கலந்துகொண்டு சாதனையாளர்களின் சாட்சியை கேட்டதால் விசுவாசம் பெலப்பட்டு 12ம் வகுப்பில் 483/500 மதிப்பெண்கள் பெற்றதாக ஜெயஸ்ரீ என்ற இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர் தேவனை துதிக்கிறார்.

மாணவ மாணவியர் தேர்வுகளை எழுத ஆயத்தப்பட்டுக்கொண்டிருப்பதால், சிறப்பு மாணவர் பிரார்த்தனை கூட்டத்தை 2026 பிப்ரவரி 1ம் தேதி, விங்ஸ் கன்வென்ஷன் மையம், செயின்ட் ஜார்ஜ் பள்ளி வளாகத்தில் நடத்துகிறோம். ஒவ்வொரு மாணவ மாணவியருக்காகவும் ஜெபிப்பதோடு தேவ சமுகத்தில் அர்ப்பணிப்போம். உங்கள் திருச்சபையை சேர்ந்தவர்களையும், உங்கள் பிள்ளைகளையும், தெரிந்த அனைத்து மாணவ மாணவியரையும் இதில் கலந்துகொண்டு ஆண்டவரை தேடுகிறதினால் கிடைக்கும் சமாதானத்தையும் பெலனையும் பெற்றுக் கொள்ள உதவுங்கள். மாணவர்கள் ஜெபத்தினால் தேவன் மீது நம்பிக்கை வைக்கும்போது, அவர் அவர்களுக்கு திடநம்பிக்கையையும் வெற்றியையும் அருளுவார். எதிர்காலத்தை தைரியமாக சந்திக்கும்படி அவர்களை விசுவாசத்தில் ஊக்குவிக்கும்படி சிறப்பு மாணவர் பிரார்த்தனை அட்டையை அவர்களுக்குக்

கொடுக்க காத்திருக்கிறோம்.

தேர்வு காலத்தில் மாணவ மாணவியர் 24 தொலை பேசி ஜெப கோபுரத்தை 8546 999 000 என்ற எண்ணில் மணி நேரமும் தொடர்புகொள்ளலாம். அர்ப் பணிப்புள்ள ஜெப வீரர்கள், அவர்களுக்காக 7 மொழி களில் ஜெபிக்க ஆயத்தமாக இருக்கிறார்கள். இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள் காலை 8 முதல் இரவு 8 மணி வரை நேரடியாக வருகிறவர்களுக்கு ஜெப உதவி வழங்குவதற்காக திறந்திருக்கும். மாணவர்கள் தனிப்பட்ட ஜெபத்திற்காக தங்கள் தேர்வு அட்ட வணையை paul@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது ஜெப கோபுரம், இயேசு அழைக் கிறார், 16, Dr. டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, சென்னை 600 028 என்ற முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கலாம். மாணவர் ஜெப அட்டை வேண்டுமென் றாலும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்குத் தெரிந்த மாணவர்கள் அனைவருக்கும் இந்தத் தகவலை பகிர்ந்துகொள்ளுங் கள்; இந்தக் கூட்டத்தில் பங்கு பெற்று தங்கள் வாழ்வில் தேவனுடைய ஆசீர்வாதத்தை அடையும்படி அவர்களை உற்சாகப்படுத் துங்கள்.

இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள்

உத்தர பிரதேசம் ஜான்ஸியை சேர்ந்த ஷில்பா என்ற சகோதரி தன் மகள் ஷேரன் இயேசு அழைக் கிறார் இளம் பங்காளர் என்றும், ISC பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வின்போது இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் ஏறெடுக்கப் பட்ட ஊக்கமான பிரார்த்தனையால் மகள் தெய்வீக ஞானத்தையும் கிருபையையும் அனுபவித்தாள் என்று மகிழ்ச்சியுடன் சாட்சி கூறினார்கள். தேவனு டைய இரக்கத்தினால் ஷேரன் 93% என்ற சாதனை மதிப்பெண்களைப் பெற்று பள்ளியில் இரண்டாம் இடம் பிடித்தாள்.

இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம், கோடிக்கணக் கானோருக்கு நம்பிக்கையின் ஸ்தலமாக, நேரடியாக வருவோருக்கு காலை 8 முதல் இரவு 8 மணி வரை ஆலோசனை வழங்கி வருகிறது. தொலைபேசி ஜெப கோபுரத்தில் 24 மணி நேரமும் ஜெப உதவி வழங்கப் படுகிறது. பல்வேறு தேவைகளுக்காக உடனடி ஜெப உதவிக்காக வருகிறவர்களுக்கு மனதுருக்கமுள்ள ஜெப வீரர்கள் ஊக்கமாக ஜெபிக்கிறார்கள். ஜெப கோபுரங்களில் செவ்வாய்க்கிழமை உபவாச ஜெபம் உட்பட விடுதலை மற்றும் அபிஷேகத்திற்காகவும் வாரந்தோறும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. வருகிற ஒவ்வொருவரும் அமைதியாக தனிப்பட்ட முறையில் ஜெபிக்கவும் தியானிக்கவும் ஜெப கோபுரத் தில் தியான அறையும் இருக்கிறது. என்னிடத்தில் வருகிற எவனையும் புறம்பே தள்ளமாட்டேன் என்ற கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தின்படி இயேசு அழைக் கிறார் ஜெப கோபுரங்கள், ஜெபத்தின் மூலம் வாழ்க் கையை மறுரூபப்படுத்தும் பணியை தொடர்ந்து செய்து வருகின்றன. உங்களைப் போன்ற பங்காளர் களின் உத்தமமான நன்கொடைகளால் எல்லா சேவை களும் கட்டணமே இன்றி அளிக்கப்படுகின்றன. இந்த ஊழியத்தை உங்கள் அன்பானோருக்கும், தெரிந்த வர்களுக்கும் அறிமுகம் செய்து அவர்களும் ஆசீர் வாதம் பெற உதவுங்கள்.

இளம் பங்காளர் திட்டம்

இயேசு அழைக்கிறார் இளம் பங்காளரான ஸ்வாதி, சகோ.டி.ஜி.எஸ்.தினகரன் நினைவு ஜெப கோபுரத் திற்கு தவறாமல் வந்து, ஜெப வீரர்களின் ஊக்கமான ஜெபத்தால் படிப்பில் சிறந்து விளங்குகிறாள். தேவனுடைய பரிபூரண கிருபையால் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் 589/ 600 மதிப்பெண்களோடு, பள்ளியில் இரண்டாவது இடம் பெற்றாள். அற்புதங் களைச் செய்யும் ஆண்டவ ருக்கு மகிமையை செலுத்தி னாள்; ஜெப வீரர்களுக்கு நன்றி கூறினாள்.

ஆம், இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர் திட்டம் அனைத்து சிறுபிள்ளைகளையும் இளைஞர்களையும் ஜெபத்தினால் தாங்கி வருகிறது. இத்திட்டத்தில் பதிவு செய்தவர்களின் பெயரை ஜெப வீரர்கள் உச்சரித்து, திட்டத்திலுள்ள வாக்குத்தத்தங்கள் நிறைவேறும்படி ஜெபிக்கிறார்கள். ஞானத்திலும், நற்குணத்திலும், தேவ னுடையதும் மனுஷருடையதுமான தயவில் வளரும் படியும் இத்திட்டத்தின் மூலம் இளம் பிள்ளைகளின் வாழ்க்கை தினசரி ஜெபத்தினால் தாங்கப்படுகிறது. அவர்களது கல்வி பயணத்தில், வேலையை தெரிவு செய்வதில், வாழ்க்கை சவால்களில் இளம் பங்காளர் திட்டம் ஆவிக்குரிய பாதுகாப்பையும் வழிகாட்டலை யும் அளிக்கிறது. தேர்வுகளின்போதும், இக்கட்டான முடிவுகளை எடுக்கும்போதும், சிக்கலான காலங்களி லும் தேவ கரம் தங்களை வழிநடத்துவதை அநேகர் கண்டுள்ளனர். பங்களிப்பைக் காட்டிலும் அடுத்த தலைமுறைக்கு விசுவாசத்தில் விதைத்து திட நம்பிக்கையோடு அவர்கள் தேவனுடைய நோக்கத்தி லும் வாக்குத்தத்தங்களில் வாழ இத்திட்டம் பெலப் படுத்தி வருகிறது.

எதிர்வரும் கூட்டங்கள்

1 பிப்ரவரி 2026 - மாணவர் பிரார்த்தனை, சென்னை

7 பிப்ரவரி 2026 - தமிழ்நாடு மேற்கு Trinity City 50வது ஆண்டுவிழா, உக்கடம், கோயம்புத்தூர்

8 பிப்ரவரி 2026 - பெதஸ்தா சிறப்பு ஆசீர்வாத கூட்டம், பெதஸ்தா

11 பிப்ரவரி 2026 - ஜெபம் மற்றும் தீர்க்கதரிசன வல்லமை பட்டமளிப்பு விழா, ஜே.சி. ஹவுஸ், சென்னை

13 - 15 பிப்ரவரி 2026 - இயேசு பிரார்த்தனை திருவிழா, ராஜமுந்திரி

13 பிப்ரவரி 2026 - போதகர்கள் மற்றும் தலைவர்கள் கூட்டம், ராஜமுந்திரி

14 பிப்ரவரி 2026 - பங்காளர் கூட்டம், ராஜமுந்திரி

21, 22 பிப்ரவரி 2026 - இயேசு அழைக்கிறார் ஆசீர்வாத பெருவிழா, சென்னை

27,28 பிப்ரவரி - 1 மார்ச் 2026 - அருமனை பிரார்த்தனை திருவிழா, கன்னியாகுமரி மாவட்டம்

28 பிப்ரவரி 2026 - பங்காளர் கூட்டம், காட்டாத்துறை, கன்னியாகுமரி மாவட்டம்

2 மார்ச் 2026 - போதகர்கள் மற்றும் தலைவர்கள் கூட்டம், காட்டாத்துறை, கன்னியாகுமரி மாவட்டம்

13 மார்ச் 2026 - NPMA - போதகர்கள் மற்றும் தலைவர்கள் கூட்டம், சாங்லி, மகாராஷ்டிரா

13 - 15 மார்ச் பிரார்த்தனை திருவிழா, சாங்லி, மகாராஷ்டிரா

14 மார்ச் 2026 - பங்காளர் கூட்டம், சாங்லி, மகாராஷ்டிரா

முடிந்தால் நீங்களும் இந்தக் கூட்டங்களில் பங்கு பெற்று ஆண்டவரை ஆராதித்து தேவனுடைய பரிபூரண சந்தோஷத்தையும் உறுதியான நம்பிக்கையையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமை யிலே நிறைவாக்குவார்" (பிலிப்பியர் 4:19) என்று வேதம் கூறுகிறபடி, தேவனுடைய அளவற்ற பரிபூரணத்தில் நிலைகொண்டிருக்கிறபடியால், பூமிக்குரிய ஆதாரங்களால் நமக்கானவை மட்டுப்படுத்தப்படாது என்பதை மறவாதிருப்போம். ஆண்டவரை நாம் முழு மனதுடன் நம்புவதால், அவர் அன்றைக்கான பெலனை தருவதற்கு, முடிவெடுப்பதற்கான ஞானத்தை தருவதற்கு, தேவையானவை எல்லாவற்றையும் அளிப்பதற்கு உண்மையுள்ளவராயிருப்பார். மாறாத அவரது கரிசனையை எண்ணி நம் உள்ளங்கள் நன்றியால் நிரம்பி வழிவதாக. அவரது அருட்கொடைக்கு உங்கள் வாழ்க்கை ஒரு சாட்சியாக விளங்கட்டும்; உங்களை அழைத்த தேவன், தம் நாம மகிமைக்காகவும், நோக்கத்திற்காகவும் தேவைப்பட்டவற்றை அளிப்பார் என்ற திடநம்பிக்கையுடன் நடப்பீர்களாக.

நீங்கள் எங்களோடு இணைந்திருப்பதற்காக எப்போதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

உங்களுக்காக ஜெபிக்கும்
உங்கள் அன்பு சகோதரன்,
Dr. பால் தினகரன்.

கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி
இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்

BANK TRANSFER:

Bank	Beneficiary	A/c No.	IFSC
Induslnd	JESUS CALLS	555444333222111	INDB0000167
ICICI	JESUS CALLS	000901056144	ICIC0000009

Please share your donation detail to us through Whatsapp to 98409 99923

Website: www.jesuscalls.org/donate
Jesus Calls Mobile app (available in Android & iOS)

EMO/CHEQUE /DD

- Write in favour of "JESUS CALLS"
- Can be sent by speed post to:
  Prayer Tower, 16, D.G.S. Dhinakaran Road,
  Chennai 600028.
- In person: At the prayer tower in your area

For donation related/partner plans/receipts related queries,
please call or Whatsapp 98409 99923. For 24x7 Prayer support, please call 8546999000

ஊழியர் பகுதி

அன்பானவர்களே, பிப்ரவரி மாதத்துக்கு உங்களை வரவேற்கிறேன். புதிய ஆண்டு தொடங்கிவிட்ட நிலையில், 'தேவன் உங்கள் வாழ்வில் ஆசீர்வாத கிரியையை ஏற்கனவே தொடங்கியிருக்கிறார்' என்ற சத்தியத்தைக் குறித்து நாம் திடநம்பிக்கையாயிருக்கலாம். இப்போது அவரது கிருபை கிரியை செய்கிறது; உங்கள் நாட்களை உருவாக்குகிறது; உங்கள் எதிர்காலத்தை ஆயத்தப்படுத்துகிறது; உரிய நோக்கத்தோடு முன்னேற அழைக்கிறது.

அநேக இளைஞர்களுக்கு இது முக்கியமான காலமாகும். பிப்ரவரி பெரும்பாலும் தேர்வுகளுக்கு ஆயத்தமாகிற, வேலையைக் குறித்த முடிவுகளை எடுக்கிற, முக்கிய வாழ்க்கை மாற்றங்களை தீர்மானிக்கிற மாதமாகும். இந்த மிக முக்கியமான கட்டத்தில் தேவன் தம் கிருபையை விசேஷவிதத்தில் பெற்றுக்கொள்ளும்படி அழைக்கிறார். ஆவிக்குரியவிதமாக உங்களை ஆசீர்வதிக்க மட்டுமல்ல; தாம் உங்கள் வாழ்க்கையில் வைத்திருக்கிற அழைப்புக்கேற்றவண்ணம் நடைமுறைரீதியாக, புத்திசாலித்தனத்துடன், திறமையுள்ளவராக உங்களை உருவாக்கவும் அவர் விரும்புகிறார்.

தேவனுடைய இருதயத்தை, ''**தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிற வனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்**'' (நீதிமொழிகள் 22:29) என்று வேதம் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

இந்த வசனம் தேவனுடைய தெய்வீக தரத்தைக் காட்டுகிறது. அவர் விசேஷித்த தன்மையில் விருப்பமாயிருக்கிறார். தம் பிள்ளைகள் திறமையுள்ளவர்களாய், உண்மையுள்ளவர்களாய், நன்கு பயிற்றுவிக்கப் பட்டவர்களாய் இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். திறமை என்பது வெறுமனே தாலந்து மட்டுமல்ல; அது சாமர்த்தியத்தில் உருவா கிறது; முயற்சி, ஒழுக்கம், நீடிய பொறுமை இவற்றின் வாயிலாக சிறப்படை கிறது. அப்படிப்பட்டவர்களை தேவன் உயர்த்துகிறார்; ஆசீர்வதிக்கிறார்;

samuel@jesuscalls.org samueldhinakaranofficial

செல்வாக்குமிக்கவர்களாக அமர்த்துகிறார்.

நீங்கள் வளரவேண்டும் என்று தேவன் விரும்பு கிறார். நீங்கள் உங்களை மேம்படுத்திக்கொள்ளவேண்டு மென்று, அறிவை பெற்றுக்கொள்ளவேண்டுமென்று, ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று, ஆழமாகக் கற்றுக் கொள்ளவேண்டுமென்று, ஏனோதானோவென்றல்ல; அர்ப்பணிப்போடு உங்களை திறமைகளை மேம்படுத்த முயற்சி எடுக்கவேண்டுமென்று அழைக்கிறார். இதை நீங்கள் செய்யும்போது, தேவன் தமது ஞானத்தை ஊற்றுகிறார்; வெளிப்பாடுகளை அளிக்கிறார்; தயவை தருகிறார்.

ஞானத்தை புதையலைப்போல தேட வேண்டுமென்று வேதம் கூறுகிறது. ஞானம் தற்செயலாக கண்டுபிடிக்கப் படவில்லை; வாஞ்சையோடு தொடர்ந்து தேடப்பட வேண்டும். படிப்பு, வேலை, ஊழியம் அல்லது தொழில் எதுவாக இருந்தாலும், அறிவையும் புத்தியையும் பெற்றுக் கொள்ளும்படி, தேவனால் அருளப்பட்ட இலட்சியங்களை நிறைவேற்றும்படி அழைக்கிறார். நீங்கள் உண்மையாய் ஆயத்தப்படும்போது, தேவையான எல்லா திறமை களையும் மேம்படுத்தும்போது, உங்கள் முயற்சிகளோடு தேவன் தம் கிருபையை கூடுதலாக அளிக்கிறார்; அந்தக் கிருபையே எல்லாவற்றையும் வித்தியாசப்படுத்துகிறது.

> திறமை என்பது வெறுமனே தாலந்து மட்டுமல்ல; அது சாமர்த்தியத்தில் உருவாகிறது; முயற்சி, ஒழுக்கம், நீடிய பொறுமை இவற்றின் வாயிலாக சிறப்படைகிறது

"சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்" (நீதிமொழிகள் 13:4) என்ற எச்சரிக்கையையும் வேதம் கொடுக்கிறது.

சோம்பேறித்தனம், வெறுமனே நிறைவேறாத விருப்பங்களை உருவாக்குகிறது. மாறாக உண்மையோ பரிபூரணத்தை தருகிறது. உண்மையுள்ள மனுஷன், மனரீதியாக, ஆவிக்குரியவண்ணமாக, நடைமுறை சார்ந்து அதிகமானவற்றை பெற்றுக்கொள்கிறான். தேவன், முயற்சியை கனப்படுத்துகிறார். அவர் ஆராய்ந்து, தேடி, உண்மையாய் உழைக்கிறவர்களை ஆசீர்வதிக்கிறார்.

ஆகவே, அன்பானவர்களே, கவனமாயிருங்கள். சராசரியோடு திருப்தியடைந்துவிடாதீர்கள். தேர்வுகளில் தேர்ச்சிக்குரிய மதிப்பெண்கள் மட்டும் பெறுவது, ஏதாவது ஒரு வேலையில் சேருவது போன்று குறைந்த தரத்திற்கு போட்டி போடாதீர்கள். தேவன் பிழைப்பதற்காக அல்ல; சிறப்பதற்காகவே உங்களை அழைத்திருக்கிறார். உயர்ந்த இலக்குகளைக் கொண்டிருங்கள்; ராஜாக்க ளுக்கு சேவை செய்வதையே இலக்காகக் கொள்ளுங்கள்.

வேதம் நமக்கு வல்லமையான உதாரணங்களைத் தருகிறது. தானியேலும் யோசேப்பும் அதிகாரமுள்ள பதவிகளுக்கு வாய்ப்பு கிடைத்ததினால் உயர்ந்திட வில்லை. விசேஷித்த ஆவியும் ஞானத்தின் ஆவியும் அவர்களுக்குள் இருந்ததால் உயர்ந்தார்கள். அவர்கள் திறமை பெற்றிருந்தார்கள்; ஒழுக்கமுடையவர்களாய், உண்மையுள்ளவர்களாய் இருந்தார்கள். அந்த வைராக்கியத்தை தேவன் கனப்படுத்தினார்; ஆட்சியாளர் களாக பணிபுரிந்து தேசங்களை உருவாக்கும்படி உயர்த்தினார்.

ஒருமுறை விழா ஒன்றில் ஓர் இளைஞரை சந்தித்தேன். அவர் நல்ல சாட்சியை பகிர்ந்துகொண்டார். 2016ம் ஆண்டு, ஓர் ஒளிப்பதிவுக்காக சிறிய காஃபி கடை ஒன்றுக்குச் சென்றேன். அப்போது அவர் அங்கு பரிமாறுகிறவராக இருந்தார். நான் அங்கு சென்றபோது, அவருக்காக ஜெபித்ததாக என்னிடம் கூறினார். அந்த விழாவை நடத்திய மிகப்பெரிய குடும்பத்தினருக்காக பிரமாண்டமான மூன்றடுக்கு கேக்கை தான் செய்ததாக பெருமிதத்தோடு கூறினார். அர்ப்பணிப்பு, வாஞ்சை, கடின உழைப்பின் மூலம் தன் திறமையை கூர்மை யாக்கி சிறந்த கேக் தயாரிப்பாளராகியிருக்கிறார். இன்று ஒரு சொந்த நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தி வருகிறார். தேவன், சமுதாயத் தில் உயர் மட்டத்தில் இருக்கிற வர்களுக்கு சேவை செய்யும்படி அவரை ஆசீர்வதித்திருக்கிறார்.

அன்பானவர்களே, இப்போது உங்களுக்கான முறை. அவரது உண்மையை கனம் பண்ணின அதே தேவன் உங்களுக்குத் திறமையையும், பெலனையும், விசேஷித்த தன்மையையும் கொடுத்து ஆசீர்வதிக்க விருப்பமாயிருக்கிறார்.

இயேசு, பேதுருவை வெறுமனே அவரைப் பின் பற்றும்படி மட்டும் அழைக்கவில்லை. ஒரு நோக்கத் தோடு, "என்னை பின்சென்று வா" என்று இயேசு அவனை அழைத்தார். "நான் உன்னை மனுஷரைப் பிடிக்கிறவனாக்குவேன்" என்றார். பேதுரு, உடனே தன் வலைகளை விட்டுவிட்டு சிறந்த அழைப்பை ஏற்றுக்கொண்டான். இயேசுவை பின்பற்றி, அவன் கற்றுக்கொண்டான், வளர்ந்தான், வல்லமையான தேவ ஊழியனாவதற்கு தேவையான திறன்களை மேம் படுத்திக் கொண்டான். அவனது கீழ்ப்படிதலும் கற்றுக் கொள்ளவேண்டுமென்ற விருப்பமும் அவனை மறுரூபமாக்கின.

இன்று தேவன் அவ்வாறே உங்களையும் அழைக் கிறார். அவரது அழைப்பை நீங்கள் பின்பற்றினால் வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்ற உங்களுக்குத் தேவையான திறன்களை அவரே மேம்படுத்துவார். அவர் உங்களை விசேஷித்தவராக்குவார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இளம் பங்காளர் திட்டத்தில் இணைத்திடுங்கள்

சிறுபிள்ளைகள், தோட்டக்காரரின் கையில் கொடுக்கப்படும் நாற்றுகளைப்போல, பெற்றோருக்கு அளிக்கப்படும் பரலோகத்தின் பொக்கிஷங்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு தாயும் தகப்பனும் இந்த இளம் பிள்ளைகள் தெய்வீக தயவில் வேரூன்றியிருக்கவும், நிச்சயமின்மையின் புயல்களிலிருந்து தேவனுடைய உண்மையான பாதுகாப்பினால் காக்கப்படவும் வேண்டுமென்று விரும்புகிறார்கள். இதுவே இளம் பங்காளர் திட்டத்தின் தரிசனமாயிருக்கிறது.

பட்டணத்தை சுற்றியிருக்கும் கோட்டையைப் போல, இளம் பங்காளர் திட்டமானது ஜெபத்தினால் அடுத்தத் தலைமுறையை சூழ்ந்துகொள்கிறது. ஈசாக்கு, யோசேப்பு, மோசே, தாவீது, தீமோத்தேயு உள்ளிட்ட தெரிந்துகொள்ளப்பட்ட மற்றும் பலரது வாழ்க்கையை அவர்கள் குடும்பத்தினரின் விசுவாசம் உருவாக்கியதுபோன்று இந்தத் திட்டம் விளங்குகிறது. இந்தத் திட்டத்தில் நீங்கள் விசுவாசத்தோடு விதைக்கும்போது, வாழ்வின் சமரசங்கள் தொடாமல் தேவ பக்தியின் வெளிச்சத்தோடு உங்கள் குழந்தை வளர பாதையை ஆயத்தம் பண்ணுவீர்கள்.

ஜெபத்தினால் எழுப்பப்படும் வாழ்க்கையில் தீர்மானங்கள் எடுக்கும் நிலையில் வழிநடத்தல் கிடைக்கும்; குணாதிசயம் காக்கப்படும்; தேவ சித்தத்தோடு இசைந்திருக்கும்படி நடத்தப்படுவார்கள். அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை சுற்றியிருப்பவர்களுக்கு ஐந்தாவது சுவிசேஷமாக விளங்கும்.

என் விசுவாசம் கனம் பெற்றது...

நான் பத்தாம் வகுப்புப் படித்தபோது, 2024ம் ஆண்டு நடந்த மாணவர் சிறப்புப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு ஜெபித்தேன். தேர்வின்போது பயம் என்னைப் பிடித்தது. ஆனால், இளம் பங்காளரான என்னை தேவன் ஆசீர்வாதமான செய்திகள், ஆராதனை மூலமாக காத்துக்கொண்டார். கூட்டம் நடந்த வளாகத்தில் எனக்கு 490/500 மதிப்பெண்கள் வேண்டும் என்று ஜெபித்தேன் (எரேமியா 33:3). ஆண்டவர் அந்த ஜெபத்திற்குப் பதில் கொடுத்து பயத்தை அகற்றினார்; நடுங்கிய என் இருதயத்தை தமது பிரசன்னத்தால் தேற்றினார். நன்றாக படிக்கவும் புது நம்பிக்கையுடன் எல்லா தேர்வுகளையும் எழுதவும் கிருபை அளித்தார். தேவனாகிய கர்த்தரின் தயவால், நான் 490 மதிப்பெண்கள் பெற்றிருப்பதாகவும், பள்ளியில் அது இரண்டாம் இடம் என்றும் அறிவித்தார்கள். முடியாது என்று எண்ணிய கனத்துக்குரிய மாணவியர் பட்டியலில் என் பெயரும் சேர்ந்தது. சிறுவயதிலிருந்தே மருத்துவராக வேண்டும் என்ற ஆசை எனக்கிருந்தது. என் குடும்ப சூழல் மத்தியிலும், ''என் சித்தமல்ல; உம் சித்தமே ஆகக்கடவது'' என்று ஒப்புக்கொடுத்து, தேவன் அற்புதமாய் வாசலை திறந்து எனக்கு மருத்துவ கல்லூரியில் இடம் அளிப்பார் என்று விசுவாசித்து தொடர்ந்து ஜெபித்து வந்தேன். Dr. பால் தினகரன் அங்கிளுக்கும், என் வாழ்வில் எனக்காக ஜெபித்து தூண்போல நின்ற இயேசு அழைக்கிறார் ஜெப வீரர்களுக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துகிறேன். - ஸ்மைலின் பிரியதர்சினி, கடலூர்.

இந்த இளம் பங்காளரை அற்புதமாய் நடத்திய ஆண்டவர் உங்கள் பிள்ளைகளுக்கு இதற்கு மேலும் செய்வார். அவர்களை இந்தத் திட்டத்தில் இணைத்து, இந்த உன்னத ஊழியத்தில் விதைத்து நன்மைகளை பெறுங்கள்.

உங்கள் பிள்ளைகளை இளம் பங்காளராக இணைப்பதன் வாயிலாக அவர்களுக்கு ஸ்திரமான அஸ்திபாரத்தை போடுகிறீர்கள்.

பரிபூரண ஜீவன்: ஆவி, ஆத்துமா, சிந்தை, சரீரத்தை பாதிக்கக்கூடிய எல்லாவித தீங்குகளிலிருந்தும் ஆண்டவர் அவர்களைப் பாதுகாப்பார்; தேவன் விரும்புகிற பரிபூரண ஜீவனைப் பெற்றனுபவிப்பார்கள் (யோவான் 10:10)

மேற்கொள்ளவே பிறந்தவர்கள்: உங்கள் பிள்ளைகள் படிப்பிலும், எல்லா துறைகளிலும் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் உலகில் வெற்றி சிறந்தவர்களாக விளங்குவார்கள் (1 யோவான் 5:4). இத்திட்டத்தில் இணைந்து வளரும் ஒவ்வொரு பிள்ளையும் அலைக்கழிப்பான தண்ணீர்கள்மேல் அமைக்கப்பட்ட பாலம்போல, மற்றவர்களும் அவற்றைக் கடந்து இயேசுவின்பேரிலான நம்பிக்கையை அடையும்படி உதவி செய்து, உலகிற்கு தேவனை வெளிப்படுத்துவார்கள்.

இன்றே உங்கள் பிள்ளையை இணைத்திடுங்கள்

ஒருபோதும் யாரும் பறித்துக்கொள்ள முடியாத இயேசுவின் கரங்களுக்குள்
அவர்களை ஒப்புக்கொடுங்கள் (யோவான் 10:28)
நன்கொடை அளிக்க: www.jesuscalls.org/donate/YPP
மின்னஞ்சல்: ypp@jesuscalls.org அல்லது அருகில் அமைந்துள்ள
இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்கு செல்லுங்கள்
மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள்: +91 98409 00477

DONATE TO YPP

சிறுவர் பகுதி

ஜிம்ஞ்ரிஜிமி

கஷ்டப்பட்டு படிப்பது கடவுளை கனம்பண்ணுவதாகும்

கதையின் நீதி:
விசுவாசமும், உண்மையாக படிப்பதும் தேவ தயவையும், வெற்றியையும் தரும்.

மனப்பாட வசனம்:
"எதைச் செய்தாலும், அதை மனுஷருக்கென்று சொல்லாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்"
(கொலோசெயர் 3:24)

அன்பானவர்களே!

நாம் ஆண்டவரை தேடும்பொழுது அல்லது அவரது பணியை நிறைவேற்றும்பொழுது, அவர் எவ்வளவாய் நம்மை ஆசீர்வதிக்கிறார் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

கர்த்தருக்குப் பயப்படுகிற பயம்

வேதாகமத்தில், எஸ்தர் என்ற புத்தகத்தை வாசித்துப் பாருங்கள். எஸ்தர் ஒரு சாதாரண ஒரு யூத பெண்மணி தான். ராணி ஆகும் பாக்கியம் அவளுக்கு தேவனால் கிடைத்தது. ஆனால், ஒரு பெரிய பிரச்னை யும் அதைத் தொடர்ந்து அவளுக்கு வந்தது. யூத ஜனங்களை அழிப்பதற்காக ஆமான் என்கிற ஒரு துஷ்ட மனுஷன் அங்கே இருந்தான். அவன் யூதர் களையெல்லாம் முற்றிலுமாக அழிக்க திட்டமிட்ட பொழுது, எஸ்தர் ராணி தேவனுடைய பாதத்தில் தன் தோழிகளோடுகூட மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபம் பண்ணியதின் விளைவாக ஆமானும், அவனு டைய குடும்பமும் அழிந்துபோகவும், யூத ஜனங்கள் அனைவரும் அழிந்துபோகாமல் பாதுகாக்கப்படவும் ஆண்டவர் மிகப்பெரிய அற்புதம் செய்தார். அதே போல இன்றைக்கும்கூட ஜனங்கள் பல்வேறு விதங் களில் அழிந்துகொண்டிருக்கிறார்கள். வாலிபர்கள் கெட்டுப்போகிறார்கள். பிரியமான வர்களே, அப்படிப்பட்டவர்கள் அழிந்துபோகாதபடி, அவர்களுக் காக "திறப்பின் வாசலில்" நின்று ஜெபிக்கும் படியாகவே ஆண்டவர் உங்களை தெரிந்துகொண் டிருக்கிறார். நீங்கள் தான் இந்த எஸ்தரைப்போல, உங்கள் குடும்பத்தாரோடு, வாலிபப் பிள்ளைகளோடு, சிறு பிள்ளைகளோடு இணைந்து ஜெபிக்கவேண்டும்.

வேத புத்தகத்தில் எசேக்கியா என்ற ராஜா, ஆண்ட வருக்கு முன்பாக உண்மையுள்ளவனாக நடந்தான். அவன் வியாதியினால் பாதிக்கப்பட்டு மரணத்திற்கு சமீபமாய் இருந்தான் (2 இராஜாக்கள் 20:2,3). அப்பொழுது ஆண்டவர் அவனுடைய ஜெபத்தைக் கேட்டு, அவனுடைய ஆயுசை 15 வருஷங்கள் கூட்டிக் கொடுத்தார். அதேபோல ஆண்டவர் உங்களுக்கும் செய்வார்.

1980-ம் ஆண்டு, எங்கள் குடும்பத்தில் ஒரு பெரிய வேதனை வந்தபொழுது, எஸ்தர் ஜெபம்பண்ணினது போல அந்த காரியத்திற்காக கர்த்தரை நோக்கி நான் உபவாசத்தோடு ஜெபம்பண்ண தீர்மானித்தேன். அவ்வாறே, செவ்வாய்க்கிழமை தோறும் காலை 9.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரைக்கும் ஒவ்வொரு வாரமும் உபவாசம் பண்ணி ஜெபிக்க ஆரம்பித்தேன். உபவாச நாட்களில் நான் ஆகாரம் எதுவும் சாப்பிடாமல், கர்த்தருடைய சமுகத்தில் உண்மையாய் முழுமனதுடன் காத்திருந்தேன். வேதம் வாசித்து அதை தியானித்து ஜெபித்து என்னு டைய உள்ளத்தை கர்த்தர் பாதத்தில் ஊற்றினேன். மூன்றே வாரங்கள் மட்டும் கடந்தன. நான் எந்த காரியத்திற்காக ஆண்டவருடைய பாதத்தில் உப வாசித்து ஜெபித்தேனோ, அந்த காரியத்தில் எனக்கு மிகப்பெரிய அற்புதம் நடந்தது. எனவே, இன்றுவரை கிட்டத்தட்ட 45 வருடங்கள் செவ்வாய்க்கிழமைதோறும் தொடர்ச்சியாக ஆண்டவருடைய சமுகத்தில் காத்தி ருந்து, உபவாசத்துடன் மன்றாடி ஜெபிக்கிறேன்.

மத்தேயு 25:21; லூக்கா 19:17 ஆகிய இந்த இரண்டு வசனங்களிலும், "கொஞ்சத்தில் உண்மை

ஸ்டெல்லா தினகரன் / stella@jesuscalls.org

யாயிருந்தால் அநேகத்தின்மேல் அதிகாரியாய் வைப்பேன்'' என்று நாம் வாசிக்கிறோம். சிறிய காரியத்திலும் கர்த்தருக்கு முன்பாக உண்மையாய் இருக்கும் பொழுது, கர்த்தர் உங்களுக்கு நிறைய பொறுப்புகளை ஊழியத்தில் கொடுத்து உயர்த்துவார். என்னுடைய காரியமும் அப்படித்தான் இருந்தது. ஆரம்ப காலத்தில் என்னால் முடிந்த அளவு கொஞ்சம்தான் நான் ஆண்டவருக்கு ஊழியம் செய்தேன். ஆனால், நான் அதிலே உண்மையாய் இருந்ததினால், ஆண்டவர் எனக்கு நிறைய ஊழியங்களைக் கொடுத்து, பலுகிப் பெருக செய்து என்னை இன்றுவரை வழிநடத்தி வருகிறார்.

இன்றைக்கு அநேகருடைய குடும்பங்களில் பலவிதமான சோதனைகள் காணப்படுகின்றன. ஆண்டவர் அந்த சோதனையில் உங்களுக்கு ஜெயம் கொடுக்கிற தேவனாக உங்களோடுகூட இருப்பார். எப்பொழுது தெரியுமா? நீங்கள் ஆண்டவருடைய காரியங்களில் உண்மையாய் இருக்கும்பொழுது. அவரே உங்களுடைய உண்மையைப் பார்த்து, சோதனையில் உங்களுக்கு உதவி செய்து, உங்களை விடுதலையாக்குவார். தீங்குக்கு தப்பிச் செல்லும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

அமெரிக்காவிலுள்ள அட்லாண்டா என்ற இடத்தில், ஹேனா என்ற ஒரு சகோதரி வசிக்கிறார்கள். அவர்கள் எப்படி உண்மையாய் ஜெபித்து ஆசீர்வாதம் பெறுகிறார்கள் என்ற சாட்சியை வாசியுங்கள்!

என் பெயர் ஹேனா. கர்த்தர் என்னுடைய குடும்பத்தை இந்திய தேசத்திலிருந்து அமெரிக்க தேசத்திற்கு அழைத்து வந்து, என் வாழ்வில் பலத்த அற்புதங்களை செய்து எங்களை ஆசீர்வதித்திருக்கிறார். இங்கு வந்தபொழுது என் கணவருக்கு திடீரென்று கால்வலி வந்தது. கால்வலி தானே சரியாகிவிடும் என்று நினைத்தோம். ஆனால், கொஞ்ச நாட்களில் அவரால் நடக்க முடியாமல் போய் விட்டது. அநேக மருத்துவர்களை சந்தித்து ஆலோசனை பெற்றோம். அந்த சமயத்தில் அருமையான ஆவிக்குரிய தாயார் திருமதி ஸ்டெல்லா தினகரன் அவர்கள் என் கணவருக்காக ஜெபிக்கும்படி தொலைபேசியில் தொடர்பு கொண்டார்கள். அப்பொழுது ''நீ அங்குள்ள பெண்களையெல்லாம் அழைத்து ஒரு ஜெபக்குழுவை ஏற்படுத்தி ஜெபி'' என்றும், ''அதற்காக நீ, ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும் என்று கேள்; அவர் உனக்கு எல்லாவற்றையும் அழகாக சொல்லித் தருவார்'' என்றும் கூறினார்கள். அன்று மாலை என்னுடைய கணவரின் நண்பர் ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அவருடைய மனைவி என்னிடம் வெகு அன்பாக பேசி பழகினார்கள். இந்த காரியத்தை அவர்களிடம் பகிர்ந்துகொண்டேன். உடனே அவர்கள், ''இதற்காகத்தான் நானும் எவ்வளவோ நாட்களாக ஜெபித்துக்கொண்டிருக்கிறேன்; என்னோடு கொஞ்சம் தோழியர் இருக்கிறார்கள். நாம் எல்லோரும் சேர்ந்து ஜெபிக்கலாம்'' என்று கூறினார்கள். அதன்படியே, நாங்கள் எல்லோரும் இணைந்து, முதல் எஸ்தர் ஜெபக்குழுவை மிகவும் அருமையாக நடத்தினோம். கர்த்தருடைய பிரசன்னம் எங்கள் ஒவ்வொருவரையும் அளவில்லாமல் நிரப்பியது. அடுத்த மாதம் எப்பொழுது வரும்? என்று சொல்லுமளவுக்கு ஆண்டவர் அதை நடத்தும்படி பெலன் கொடுத்தார்.

அன்று மாலை என் கணவரின் மருத்துவ செலவு ரசீதை எனக்கு காண்பித்தார்கள். அதில், முதல் தவணை தொகை 20,000 டாலர் என்றிருந்தது. நாம் நம்முடைய சொந்த ஊருக்கே போய்விடலாம். அமெரிக்க வாழ்க்கை நமக்கு சரி வராது என்றார். அதற்கு நான், ''நாம் இந்தியா போவதற்காகவா ஆண்டவர் இவ்வளவு அழகாக ஒரு எஸ்தர் ஜெபக்குழு கூட்டத்தை நடத்திக்கொடுத்தார்? நீங்கள் போய் மீண்டும் அந்த மருத்துவமனையில் கேளுங்கள், ஆண்டவர் ஏதாவது அற்புதம் செய்வார்'' என்றேன். அவர் மருத்துவமனைக்கு சென்று அந்த ரசீதைக் காண்பித்தார். உடனே அவர்கள் அதை வாங்கி, 200 டாலர் என்று மாற்றிக் கொடுத்தார்கள். என் கணவரால் அதை நம்பவே முடியவில்லை. யோசித்துக்கூட பார்க்க முடியாதபடி, கர்த்தர் அற்புதம் செய்தார். அவ்வாறு நாங்கள் ஜெபிக்க ஜெபிக்க கர்த்தர் அநேக அற்புதங்களை செய்ய ஆரம்பித்தார். சிலர் குழந்தை இல்லாமல் ஜெபிக்க வருவார்கள். 38 வயதில் ஒரு சகோதரி, இதற்குமேல் எனக்கு திருமணம் ஆகுமா? என்று வந்தார்கள். அவர்களை உற்சாகப்படுத்தி ஜெபிக்க வைத்தோம். அவர்களுக்கு அற்புதமாக திருமணம் நடக்க கர்த்தர் உதவி செய்தார்.

இப்படி அற்புதங்கள் நடந்துகொண்டிருந்த அந்த நேரத்தில், எனக்கு அநேக பிசாசின் போராட்டங்களும் வர ஆரம்பித்தன. அப்பொழுது கர்த்தர் எனக்கு ஒரு வசனத்தின் மூலமாக பேசினார். அதில், ''பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானுடைய வீட்டிற்குள் ஒருவன் புகுந்து அவன் உடமைகளை எப்படி கொள்ளையாட முடியும்? அவனைக் கட்டினாயாகில் அவனைக் கொள்ளையாடலாம்'' என்றது அந்த வசனம். எவ்வளவு அழகாக ஆண்டவர் எழுதி வைத்திருக்கிறார். ஏன் நாம் அப்படி செய்யக்கூடாது? என்று நினைத்து, எஸ்தர் ஜெபம் நடத்துவதற்கு முன்பாக அதற்கென்று ஆயத்த ஜெபம் ஒன்றைத் தொடங்கி, முதலில் இந்த பலவானைக் கட்டி எல்லோருடைய பாதுகாப்பிற்காகவும் ஜெபிக்க

ஆராம்பித்தேன். அன்றிலிருந்து நான் ஆண்டவரோடு நெருங்கிப் பழகுகிற தெய்வீக ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டேன்.

அதுபோன்றே, நான் முதன் முதலில் ஜூனியர் எஸ்தர் ஜெபக்குழுவை ஆரம்பிக்கும்பொழுது, என்னுடைய குழுவிலுள்ள சகோதரிகளின் பிள்ளைகள் மற்றும் என்னுடைய பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து ஜெபத்தை நடத்தினார்கள். பிள்ளைகளின் படிப்பையும் அதினிமித்தம் தேவன் ஆசீர்வதித்தார்.

கடைசியாக, நாங்கள் ஒரு வீடு வாங்குவதற்காக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். கர்த்தர் எங்களுக்கு அருமையான வீட்டைக் கொடுத்து ஆசீர்வதித்தார். இவ்வாறாக கர்த்தர் எங்களை எல்லாவிதத்திலும் ஆசீர்வதித்து சந்தோஷப்படுத்தி உற்சாகப்படுத்தினார்.

அமெரிக்காவில் இருந்துகொண்டு, இவ்வளவாய் கர்த்தருக்கென்று ஊழியம் செய்கிறார்கள். நீங்களும், ''இனிமேல் நானும் உண்மையாக, முழுமனதோடு ஜெபக்குழுவை கர்த்தருக்கென்று நடத்துவேன்'' என்று ஒரு தீர்மானம் எடுங்கள். அப்பொழுது கர்த்தர், எங்களுக்கு கொடுத்த ஆசீர்வாதத்தைப் போன்று உங்களுக்கும் செய்வார்.

பரிசுத்த அழைப்பு

''உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்'' (ஏசாயா 26:3) என்ற வேத வசனத்தின்படி, கர்த்தரை அவர்கள் விடாப்பிடியாய் பற்றிக்கொண்டார்கள். ஆண்டவர் அவர்களுக்கு எல்லாவற்றையும் ஆசீர்வாதமாய் மாற்றிக்கொடுத்தார். அதேபோல, உத்தம இருதயத்தோடு கர்த்தருடைய பரிசுத்த அழைப்பிற்கு உங்கள் வாழ்வையும் அர்ப்பணியுங்கள்.

''பரிசுத்தமானது ஆலயத்தின் அலங்காரமாயிருக்கிறது'' (சங்கீதம் 93:5) என்று வேதம் சொல்லுகிறது. நீங்கள் பரிசுத்தமாய் உடை உடுத்தும்பொழுது, உங்களுடைய பேச்சு பரிசுத்தமாய் இருக்கும்பொழுது, உங்களை பார்க்கும்பொழுது ஒரு தெய்வீக அலங்காரமும் காணப்படும் (நீதிமொழிகள் 31:30). இதுதான் ஆரம்பத்தில் ஆண்டவர் என்னோடு பேசி ஆவிக்குரிய வாழ்க்கையில் எனக்கு கற்றுக்கொடுத்தார். கர்த்தர் இந்தவிதமான பரிசுத்த வாழ்க்கையை சிநேகிக்கிறார் (மல்கியா 2:11). நீங்கள் உடையிலும், நடையிலும், பேச்சிலும் பரிசுத்தமாய் நடக்கும் பொழுது, கர்த்தர் உங்கள்மேல் பிரியமாயிருப்பார். அவருக்கு பிரியமான பாத்திரமாக நீங்கள் நிச்சயம் மாறுவீர்கள் (2 தீமோத்தேயு 2:21; எபேசியர் 5:3,4).

மார்த்தாள், மரியாள் வீட்டிற்கு ஆண்டவர் இயேசு அடிக்கடி போனார். மார்த்தாள், மரியாள், லாசரு மூன்று பேரும் இயேசுவில் மிகவும் அன்புகூர்ந்தார்கள். மார்த்தாள் சமையல் செய்யும் காரியங்களை கவனிப்பாள். ஆனால், மரியாளோ ஆண்டவருடைய பாதத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டாள். இதுதான் நானும்கூட என் வாழ்வில் கற்றுக்கொண்ட வெற்றியின் இரகசியம். என்ன வியாதி வந்தாலும், கஷ்டங்கள் வந்தாலும், உடனே ஆண்டவருடைய சமுகத்தில் முழங்கால்படியிடுவேன்.

எனக்கு அருமையானவர்களே, இன்றைக்கு யாரெல்லாம் கவலையோடும், பாரத்தோடும் இருக்கிறீர்கள்? இவ்வளவு பிரச்னைகளை வைத்துக் கொண்டு எப்படி நான் எஸ்தர் ஜெபக்குழு ஊழியத்தை செய்வது என்று நினைக்கிறீர்களா? முதலாவது முழங்கால்படியிடுங்கள். என்ன காரியமானாலும் ஆண்டவரோடு பேசுங்கள். அவர் உங்களுக்கு ஜெயம் கொடுக்கிற தேவனாய் இருக்கிறார். அவரே உங்கள் ஜெபங்களையெல்லாம் கேட்டு பதிலளிப்பார். உங்கள் குடும்பத்திலுள்ள பிரச்னைகளையெல்லாம் மாற்றுவார். ஜெப வீரராக, வீராங்கனையாக எழும்பிப் பிரகாசிக்கும்படி செய்வார் (ஏசாயா 40:31).

நீங்கள் முழங்கால்படியிட்டு ஆண்டவருக்காக காத்திருக்கும்பொழுது, அவர் உங்களுக்கு புதுப்பெலன் தருவார். கழுகு செட்டைகளை அடித்து உயரே புதுப்பெலனடைந்து எழும்புவதுபோல உங்களையும் பெலப்படுத்தி, ஆசீர்வாதமாக வழிநடத்துவார் (ஏசாயா 58:8,11). உங்களை பிதாவின் ராஜ்யத்தில் சூரியனைப்போல பிரகாசிக்க செய்வார். ஆகவே, தேவன் விரும்புகிறபடியே, நீங்கள் அவருடைய ராஜ்யத்திற்கும், மகிமைக்கும் பாத்திரவான்களாக, கர்த்தருக்கென்று ஒளிவீசிப் பிரகாசிக்கும்படியாக அவரை நோக்கி ஜெபிக்கிற ஜெபவீரர், வீராங்கனைகளாக உங்கள் வாழ்வை பயபக்தியுடன் அர்ப்பணியுங்கள். எஸ்தர் ஜெபக்குழு ஊழியத்தில் இணைந்து தேவ சித்தத்தை நிறைவேற்றி, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துங்கள். கர்த்தர் தாமே உங்களை தேவ மகிமை நிறைந்த ஜெபவீரராக வீராங்கனைகளாக எழும்பிப் பிரகாசிக்கச் செய்வாராக!

இன்றைய இறை தியானம்

பிப்ரவரி – 2026

1 **எரேமியா 29:5** - வீடு கட்டி குடியிருப்பீர்கள்
தியானத்திற்கு: 2 சாமு. 5:11; 1 இராஜா. 11:38; எசே. 28:26

2 **ஆபகூக் 3:18** - இரட்சிப்பின் தேவன்
தியானத்திற்கு: யோபு 13:16; சங். 25:5; ரோமர் 10:9,10

3 **சங்கீதம் 140:12** - கர்த்தர் நம்மை விசாரிக்கிறவர்
தியானத்திற்கு: சங். 68:5; எசே. 34:11; 1 பேதுரு 5:7

4 **1 சாமுவேல் 1:17** - சமாதானம்
தியானத்திற்கு: மாற்கு 5:25-34; யோவான் 20:19,26; பிலி. 4:7

5 **எரேமியா 31:14** - நன்மையினால் திருப்தி
தியானத்திற்கு: சங். 65:4; எரே. 32:42; அப். 14:17

6 **எரேமியா 31:17** - கர்த்தர் உங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிப்பார்
தியானத்திற்கு: ஆதி. 22:17; நீதி. 20:7; ஏசாயா 54:13

7 **யோவான் 15:9** - தேவன் நம்மில் அன்பாயிருக்கிறார்
தியானத்திற்கு: உபா. 23:5; யோவான் 13:34; எபே. 5:2

8 **செப்பனியா 3:17** - தேவன் நம் நடுவில் இருக்கிறார்
தியானத்திற்கு: சங். 46:5; ஏசாயா 12:6; யோவேல் 2:27

9 **புலம்பல் 3:24** - கர்த்தர் நம் பங்கு
தியானத்திற்கு: எண். 18:20; சங். 16:5; 73:26; எரே. 10:16

10 **உபாகமம் 31:6** - திடமனதாயிருங்கள்
தியானத்திற்கு: யோசுவா 1:6-9; சங். 31:24; அப். 27:22-25

11 **ரோமர் 8:28** - சகலமும் நன்மையாக நடக்கிறது
தியானத்திற்கு: ஆதி. 50:20; நெகே. 2:18; சங். 85:12

12 **யோபு 5:10** - தாழ்மையுள்ளவனை கர்த்தர் உயர்த்துவார்
தியானத்திற்கு: சங். 138:6; நீதி. 3:34; லூக்கா 14:11

13 **1 இராஜாக்கள் 9:3** - கர்த்தர் உங்கள் விண்ணப்பத்தைக் கேட்பார்
தியானத்திற்கு: 2 நாளா. 30:20; எஸ்றா 8:23; ஏசாயா 38:5

14 **நீதிமொழிகள் 14:27** - கர்த்தருக்கு பயப்படுங்கள்
தியானத்திற்கு: ஆதி. 22:11,12; சங். 128:1-4; நீதி. 28:14

15 **எரேமியா 33:6** - கர்த்தர் ஆரோக்கியம் தருவார்
தியானத்திற்கு: மல்கியா 4:2; மத். 15:28; மாற்கு 5:25-29

16 **யாத்திராகமம் 23:30** - நீங்கள் விருத்தியடைவீர்கள்
தியானத்திற்கு: ஆதி. 26:12,13; 2 சாமு. 5:10; லூக்கா 2:52

17 **ஆமோஸ் 3:7** - இரகசியத்தை வெளிப்படுத்துகிறார்
தியானத்திற்கு: லூக்கா 8:17; எபே. 3:3,6; கொலோ. 4:3,4

18 **சங்கீதம் 37:23** - கர்த்தர் நம் வழியில் பிரியமாயிருக்கிறார்
தியானத்திற்கு: உபா. 28:9; 1 இராஜா. 3:14; 11:38; சங். 81:13

19 **மத்தேயு 21:22** - ஜெபத்திலே கேட்பதைப் பெறுவீர்கள்
தியானத்திற்கு: 1 நாளா. 4:10; மாற்கு 11:24; யோவான் 16:24

20 **கலாத்தியர் 6:8** - நித்திய ஜீவன்
தியானத்திற்கு: லூக்கா 18:29,30; யோவான் 3:36; 1 யோவான் 5:11

21 **லேவியராகமம் 26:6** - தத்தளிப்பு இல்லை
தியானத்திற்கு: ஏசாயா 14:3; எரே. 30:10; எசே. 34:28

22 **யோவேல் 2:25** - இழந்ததைத் திரும்ப அளிப்பார்
தியானத்திற்கு: ஆதி. 14:14-16; 1 சாமு. 30:8,19; எரே. 30:3

23 **1 கொரிந்தியர் 16:13** - விசுவாசத்தில் நிலைத்திருங்கள்
தியானத்திற்கு: அப். 14:22; கொலோ. 1:22; 2 தீமோ. 1:5

24 **எபேசியர் 1:3** - ஆவிக்குரிய சகல ஆசீர்வாதம்
தியானத்திற்கு: ஏசாயா 11:2; ரோமர் 8:26; கலா. 5:22,23

25 **சங்கீதம் 11:7** - கர்த்தர் நம்மை நோக்கிப் பார்க்கிறார்
தியானத்திற்கு: யோபு 34:21; சங்கீதம் 11:7; நீதி. 15:3

26 **ஓசியா 14:6** - அலங்காரம்
தியானத்திற்கு: ஏசாயா 62:3; சக. 9:16; வெளி. 2:10

27 **யாக்கோபு 5:15** - விசுவாசமுள்ள ஜெபம்
தியானத்திற்கு: மத்தேயு 21:21; மாற்கு 11:24; யூதா 20

28 **நீதிமொழிகள் 22:9** - நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்
தியானத்திற்கு: ஆதி. 26:5; 28:14; உபா. 28:3-6; சங். 115:15

இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்

இணையதளம்: www.jesuscalls.org/ta/dpv
கபேஸ்புக்: Jesus Calls Tamil
யூடியூப்: JesusCalls சப்ஸ்கிரைப் செய்திருங்கள்
கபேமிலி சேனல் மொபைல் செயலி
கபேமிலி சேனல்: இணையதளத்தில் www.familychannel.org

Karunya
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++

Accreditation
CATEGORY 1 Institution UGC GoI
A++ Grade
ACCA
NBA
Global Ranking
THE World University Rankings 2025
India Rating
PLATINUM I-GAUGE
Global Rating
STARS
STARS

ADMISSION OPEN '26

GET UPTO 100% SCHOLARSHIP*

INDIA'S TOP RANKED UNIVERSITY...

Programs Offered at KARUNYA

B.Tech.

- **Aerospace Engineering**
- **Aerospace Engineering** Spl. Unmanned Aerial Vehicles
- **Aerospace Engineering** Spl. Artificial Intelligence & Machine Learning
- **Aerospace Engineering** Spl. Aircraft Maintenance
- **Artificial Intelligence & Data Science**

- **Biomedical Engineering**
- **Biomedical Engineering** Spl. Artificial Intelligence & Machine Learning

Powered by PHOENIX *– Advancing healthcare through innovation*

- **Biotechnology**
- **Biotechnology** Spl. Genome Engineering & Technology
- **Biotechnology** Spl. Artificial Intelligence
- **Civil Engineering**
- **Civil Engineering** Spl. Building Information Modelling and Digital Twin
- **Civil Engineering** Spl. Geospatial Technology

- **Computer Science & Engg.**
- **Computer Science & Engg.** Spl. Artificial Intelligence & Machine Learning
- **Computer Science & Engg.** Spl. Cyber Security
- **Computer Science & Engg.** Spl. Quantum Computing
- **Computer Science & Engg.** (Artificial Intelligence)
- **Computer Science & Engg.** (Artificial Intelligence & Machine Learning)
- **Computer Science & Engg.** (Cyber Security)

in collaboration with Google

- **Electronics & Communication Engineering**
- **Electronics & Communication Engineering** Spl. Artificial Intelligence & Machine Learning
- **Electrical & Electronics Engg.**
- **Electrical & Electronics Engg.** Spl. Artificial Intelligence & Machine Learning
- **Food Processing & Engineering**
- **Food Processing & Engineering** Spl. Internet of Things
- **Mechanical Engineering**
- **Mechanical Engineering** Spl. Artificial Intelligence & Machine Learning

- **Robotics & Automation**
- **Robotics & Automation** Spl. Artificial Intelligence & Data Science
- **Robotics & Automation** Spl. Artificial Intelligence & Machine Learning

with FESTO *– Global Leader in Industrial Automation*

M.Tech

- **Aerospace Engineering**
- **Artificial Intelligence & Data Science***
- **Biotechnology**
- **Biomedical Instrumentation**
- **Computer Science & Engg.**
- **Computer Science & Engg.** (Artificial Intelligence & Machine Learning)*
- **Cyber Security**
- **Food Processing & Engineering**
- **Robotics & Automation**
- **Structural Engineering**
- **Virtual Prototyping & Digital Manufacturing***
- **VLSI Design**

B.Sc.

- **Artificial Intelligence and Data Science**
- **Forensic Science**
- **Information Security and Digital Forensics**
- **Media Production and Digital Marketing**
- **Energy Science and Technology**

in partnership with AMARON

- **Semiconductor Technology**

Powered by edveon *– India's Chipset Innovator*

- **Medical Laboratory Technology**
- **Radiography and Imaging Technology**
- **Operation Theatre and Anesthesia Technology**

B.Sc. (Hons.)

- **Agriculture**
- **Psychology**

M.Sc.

- **Agriculture** (Agronomy)
- **Agriculture** (Genetics & Plant Breeding)
- **Artificial Intelligence & Data Science**
- **Forensic Science**
- **Horticulture** (Fruit Science)
- **Biotechnology**
- **Food Science & Technology**
- **Masters in Public Health**
- **Masters in e-Health and Telemedicine Management**

B.Com.

- (Specialisation in Professional Accounting & Financial Technology)
- **Online B.Com.**

PG Diploma

- **Medical & Analytical Laboratory Technology** *in Association with* Microbiological Laboratory

Management

- **M.B.A.** *with* ZOHO *Integration*
  Gain real-world business skills using Zoho's leading enterprise tools
- **Online M.B.A.**

*ACTE approval awaited

Karunya Institute of Technology and Sciences,
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114, Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu
Toll Free: 1800 42 54 300, 1800 88 99 888

APPLY NOW!
Scan QR Code to Start the Admission Process

Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest

ராஜமுந்திரியில்...

இயேசு பிரார்த்தனை திருவிழா

13-15 பிப்ரவரி 2026

வெள்ளி முதல் ஞாயிறு மாலை 6 மணி

இடம்:
MARGANI ESTATE GROUNDS,
MORAMPUDI, RAJAHMUNDRY.

போதகர்கள் & தலைவர்கள் கூட்டம்
2026 பிப்ரவரி 13
(வெள்ளி) காலை 9 மணி

பங்காளர் ஆசீர்வாத கூட்டம்
2026 பிப்ரவரி 14 (சனி) காலை 9 மணி

இடம்:
ROCK CHURCH OF INDIA,
Rock Center, Kavalagoyya, Rajahmundry 533107,
East Godavari District, Andhra Pradesh

சென்னையில்

இயேசு அழைக்கிறார் ஆசீர்வாத பெருவிழா
நந்தம்பாக்கம்

இடம்: பஞ்சாயத்து அலுவலக மைதானம்,
61 நந்தம்பாக்கம், குன்றத்தூர்.

பிப்ரவரி 2026
21-22
(சனி, ஞாயிறு) மாலை 6 மணி

2026
பிப்ரவரி
27,28
மார்ச் **1**
வெள்ளி - ஞாயிறு மாலை 6 மணி

கன்னியாகுமரியில்

அருமனை பிரார்த்தனை திருவிழா

இடம்: அருமனை,
கன்னியாகுமரி மாவட்டம்.

பங்காளர் ஆசீர்வாத கூட்டம்
2026 பிப்ரவரி 28 (சனி) காலை 9 மணி

NPMA போதகர்கள் & தலைவர்கள் கூட்டம்
2026 மார்ச் 2 (திங்கள்) காலை 9 மணி

இடம்:
பெத்தேல் மிஷன் ஆலயம்,
காட்டாத்துறை, கல்குளம், கன்னியாகுமரி மாவட்டம்.

சாங்கிலியில்...

மகாராஷ்டிரா பிரார்த்தனை திருவிழா 2026

13-15 மார்ச் 2026
வெள்ளி முதல் ஞாயிறு மாலை 5.30 மணி

இடம்:
KAVALAPUR
AIRPORT GROUND
TASGAON SANGLI ROAD, SANGLI,
TALUKA MIRAJ, SANGLI DIST 416306
MAHARASHTRA

NPMA போதகர்கள் & தலைவர்கள் கூட்டம்
2026 மார்ச் 13 (வெள்ளி) காலை 9 மணி

பங்காளர் ஆசீர்வாத கூட்டம்
2026 மார்ச் 14 (சனி) காலை 9 மணி

ஜெபியுங்கள், கலந்துகொள்ளுங்கள், ஆதரியுங்கள்.

REGISTERED NEWSPAPER RNI No.TNTAM/2003/10418